


361. புதிய நண்பன்

சொர்க்கத்திலே எத்தனையோ இன்பங்கள் நிறைந்திருக்கின்றன என்பர். தமிழ் நாடு என்று சிறப்பித்துப் பேசும் தென் தமிழ்ப் பாண்டிவளநாட்டைப் பூலோக சொர்க்கமாகவே காண்கிறார்களாம் வானர வீரர்கள்.

இந்தப் பூலோக சொர்க்கத்திலே அத்தனை வகை இன்பங்களோடு, அந்தச் சொர்க்க பூமியில் இல்லாத இரண்டு அதிசயமான பொருள்களும் இருக்கின்றனவாம். அவைதான் முத்தும் முத்தமிழும்! இந்த இரண்டும் இல்லாததால் சொர்க்க போகமும் பரிபூர்ண இன்பமாகாதாம்.

தமிழையும் புறக்கணித்த சோர்வு

இவ்விதமாகத் தென் தமிழ் நாட்டின் தனிப்பெருஞ் சிறப்பை அனுமன் முதலான நல்லறிஞர்கள் நன்குணர்ந்து கொண்ட போதிலும், சீதாதேவியைக் காணாத துன்பம் பெருஞ் சோர்வை உண்டுபண்ணி, முத்தையும் முத்தமிழின்பத்தையும் கூட மறக்கச் செய்கிறது. எனவே தான் அனுமனைப் போன்ற ரஸிகர்கள் இங்கும் சுக்கிரீவாக்ஞையை மீறி அகஸ்தியரிடம் போகவில்லை. மரணச்சோர்வு போன்ற இந்தச் சோர்வைப் பாருங்கள் :



என்ற தென்தமிழ்
  நாட்டினை எங்கணும்
சென்று நாடித்
  திரிந்து, திருந்தினர்,
பொன்று வாரிற்
  பொருந்தினர் போயினர்,
துன்ற லோதியைக்
  கண்டிலர் துன்பினர்.

[என்ற — என்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட. திருந்தினர் — திருந்திய அறிவும் குணமும் பண்பாடும் வாய்ந்த வானர வீரர்கள். பொன்றுவாரின் பொருந்தினர் — இறப்பவர் போலச் சோர்வு பொருந்தியவராய். துன்றலோதியை — நெருங்கிய இருள் போன்ற கூந்தலையுடைய சீதாதேவியை. துன்

பினர் — துன்பங் கொண்டவர்களாய்.]

பாண்டிநாடு முழுவதும் தேடிக்கொண்டே வந்தவர்கள் அப்பால் தரையில்லாமல் கடலாயிருப்பது கண்டு பெருஞ் சோர்வடைந்து, கடற்கரையிலுள்ள மகேந்திர பர்வதத்தை அடைகிறார்கள்.


தென் பாண்டி நாட்டிலே முத்தும் முத்தமிழும் மட்டுமா தோழமை பூண்டிருக்கின்றன? தமிழும் தென்றலும் ஒன்றையொன்று தழுவித் திருந்திருப்பது போலவும் தோன்றுகின்றன! இந்தத் 'தமிழ்'த் தென்றல், தென்பாண்டி நாட்டிலே அந்தப் பெருவழி கடந்து தெற்கு மாகடலை நோக்கி வானரர்கள் வரும்போதே, அவர்களை அக்கடலின் குளிர் நீர்த் திவலைகளுடன் வந்து வரவேற்கிறதாம். என்னும் சோர்வைப் போக்க முடியவில்லை.

கடலின் அழைப்பு

வானரர்கள் சோர்ந்து போன உள்ளத்துடன் தான் கடலையும் நோக்குகிறார்கள். ஆனால் கடல் இவர்களை எவ்வளவு குதூகலமாய், கம்பீரமாய் வரவேற்கிறது! கையைத் தூக்கி 'வாருங்கள், வாருங்கள்; போய்ப் பாருங்கள்; அதோ இலங்கையில் தானே இருக்கிறாள்!' என்றெல்லாம் பிரசங்கிக்கிறதாம் தன் கடற் பெருந் தொண்டையால்:

மழைத்தவிண்
ணகமென
முழங்கி
வானுற
இழைத்தவெண் டிரைக்கரம்
எடுத்(து), 'இலங்கையாள்
உழைத்தடங் கண்ணி'யென்(று)
உரைத்திட்(டு), ஓடிவந்(து)
அழைப்பதே கடுக்கும்அவ்
ஆழி நோக்கினர்.

[மழைத்த விண்ணகம் — நீருண்ட மேகத்தையுடைய ஆகாய வீதிகள். வானுற இழைத்த வெண்டிரைக் கரம் — வானளாவி வீசுவதுபோல் வீசியெறியும் வெண்மை கொண்டு இழைத்த அலைகளாகிய கைகள். இலங்கையாள் — இலங்கையில் இருக்கிறாள். உழைத் தடங்கண்ணி — மான்போல் மருளும் விசாலமான கண்களையுடைய சீதை. உரைத்திட்டு — உரைத்து விட்டு. கடுக்கும் — ஒத்திருக்கின்ற. அவ் ஆழி — அந்தத் தென் கடல்.]



அலைக் கைகளைக் கொட்டி முழக்கிக் கடல் உரத்துப் பேசுகிறதாம். கரையேறி ஓடி வந்து அழைத்துப் பார்க்கிறதாம். எனினும் அனுமன் முதலான அறிஞர்களுக்குக்கூட அந்தப் பாஷை யாவது அழைப்பாவது ஆத்திரமாவது புரியவில்லை!

ஆலோசனை

முன்பு மகூடத்திலே பிரிந்து இப்போது மகேந்திரத்திலே வந்து கூடியிருக்கும் வானரர் யாவரும், 'சீதையைக் காணவில்லையே; இனிச் செய்வதென்ன?' என்று நாக்கு மிகவும் குளற ஒருவரோடொருவர் பேசத் தொடங்குகிறார்கள்.

'மகாராஜா குறித்த ஒரு மாதத் தவணையும் கழிந்து விட்டது. இனி நம் செயல் அற்றது—அதாவது இனிமேல் நாம் செய்வதற்கு ஒரு செயலுமில்லை' என்று பேசிக் கொண்டார்கள்.

'ஒரு செயல் இருக்கிறதப்பா! செயலற்றிருக்கும் செயல் தான்! இப்படியே சும்மா இருந்து சுகம் பெறுவோம்; தவம் புரிவோம்' என்கிறான் ஒருவன்.

'சாமியாரானாலும் சுக்கிரீவாக்ஞை சும்மா விட்டுவிடுமா? எனவே விஷம் உண்பதே நாம் இப்போது செய்யத் தகுந்தது!' என்கிறான் ஒருவன்.


'அருந்துகிற விஷம் மாற்று மருந்தே இல்லாத அவ்வளவு கொடிய விஷமாக இருக்க வேணுமப்பா!' என்று ஆலோசனை சொல்லுகிறான் ஒருவன். 'இல்லாவிட்டால் பொல்லாத பாண்டி நாட்டுத் தமிழர்கள் பிழைப்பு மூட்டி விடவும் கூடுமே!' என்று எண்ணினானோ, என்னவோ?

இந்த வானரக் கூட்டத்தின் தலைவனான அங்கதனோ சுக்கிரீவாக்ஞையைக் காட்டிலும் ராமனது மன வருத்தத்திற்கு அஞ்சுகிறான். அஞ்சித் தன் உயிரை மாய்த்துக் கொள்ளலாமென்று நினைக்கிறான்.

அனுமனோ, 'தவணை கடந்தாலும் மேலும் தேட வேண்டியது தான். உயிரை விட வேண்டுமென்றால் ஜடாயுவைப் போல் அல்லவா பிராணத் தியாகம் செய்ய வேண்டும்?' என்கிறான்.

ஜடாயுவின் அண்ணன்

இப்படி ஜடாயுவின் மரணம் குறித்த பிரஸ்தாபம் ஓர் அன்னியன் காதில் விழுகிறது. அவன், நெஞ்சு பறை அடிக்க, உடல் பதைக்க வருகிறான்,



வானரர்கள் இருக்கும் இடத்திற்கு:

'முறையுடை எம்பியார்
முடிந்தவா!' எனப்
பறையிடு நெஞ்சினன்,
பதைக்கும் மேனியன்.

[முறையுடை எம்பியார் — நீதிநெறியுடைய என் தம்பி. முடிந்தவா — முடிந்தவாறு என்னே. என - என்று. பறையிடு நெஞ்சினன் - பறையடிப்பது போல் படபடக்கிற நெஞ்சையுடையவன்.]

சிறகுகள் தீய்ந்துபோய்ப் பறக்க முடியாத நிலையில் இருக்கிறான் ஜடாயுவின் அண்ணனாகிய சம்பாதி. எனவே பறந்து வராமல் நடந்து வருகிறான். தம்பியின் பெருவலிமையும், நீதியில் அவனுக்குள்ள விருப்பமும் சம்பாதி

னன்கறிந்தவைதானே? ஆகவே, தம்பியை 'எம்பியார்' என்கிறான்.

அத்தகைய தம்பியை யார் கொல்லத் துணிந்தவர்? அந்தத் தம்பியை அழிக்க வல்ல ஆயுதம்தான் எது? அந்த ஆயுத பாணி யார்? இந்த நினைப்பிலே கடல் போலப் பொங்குகிறது கண்ணீர் சம்பாதிக்கு.

சம்பாதி வருவதைக் கண்டதும், அந்தப் பெரிய ராட்சஸத் தோற்றத்தைப் பார்த்ததும், வானரர்கள் ஓடிப் போகிறார்களாம், 'தேடிப்போன ராவண ராட்சஸனே வந்து விட்டானோ?' என்ற நினைப்புடன்.

அதே நினைப்பு அனுமனுக்கும்தான். ஆனால் ஓடிப்போகவில்லை. 'அட வஞ்சகா, அட கள்ள ராட்சஸ ரூபமே! என்னைக் கண்டும் இனி உன்னால் தப்பிப்போக முடியுமா?' என்று எதிரே நின்று ஆர்ப்பாட்டம் செய்கிறான்.

ஆழ்ந்தகன்ற நுண்ணறிவாளனானதால் அனுமன் சம்பாதியைக் கூர்ந்து பார்க்கிறான். பார்த்து முகக் குறிப்பினால் 'இவன் குற்றமற்றவன்' என்று நிர்மானிக்கிறான்.

'ஜடாயுவைக் கொன்றவர் யார்?' என்று சம்பாதி கேட்கிறான். அதற்கு அனுமன், 'உன்னை நீ உள்ளவாறு தெரிவித்த பின்பே உன் வினாவுக்கு விடை யளிப்பேன்' என்கிறான்.

அனுமன் சொன்ன செய்தி

சம்பாதி தன்னை இன்னானென்று தெரிவித்துக் கொண்டதும் அனுமன், ஜடாயு ராவணனுடன் போர் செய்து இறந்தானென்று செய்தி சொல்லுகிறான். அது கேட்டுச் சம்பாதி பிரலாபிக்கிறான்.

அனுமன் தேற்றுகிறான். தேற்ற ஒருவாறு தேறி, ஜடாயு ராவணனுடன் போர் செய்த காரணத்தை வினவுகிறான்.

அந்த நிகழ்ச்சியை மூன்று கவிகளில் அனுமன் தெரிவிக்கிறான். ஆரணிய காண்டத்திலே நாம் கண்ட ஜடாயு—ராவணப் போரை அனுமனும் எப்படியோ கண்டு காட்டுவது போல் அமைந்திருக்கின்றன கவிகள்.

முதல் முதல் மாய மானின் வியாஜமாக ராம லட்சுமணர் சீதையைப் பிரிந்த செய்தி :

எங்கோ மான்அவ்
  இராமன் இல்லுளாள்,
செங்கோ லான்மகள்,
  சீதை செவ்வியாள்,
வெங்கோல் வஞ்சன்
  விளைத்த மாயையால்
தம்கோ னைப்பிரி-
  வுற்ற தன்மையாள்.

[இல்லுளாள் — இல்லாள்; மனைவி. செங்கோலான் மகள்—ஜனக ராஜகுமாரி. செவ்வியாள் — செம்மையான லட்சணங்களோடு கூடிய சுந்தரி. வெங்கோல் வஞ்சன் — ராவணன்.]

இத்தகைய சீதையைக் கவர்ந்து சென்ற அரக்கனைக் கண்டதும் ஜடாயு என்ன செய்கிறான்?

கொண்டே கும்கொலை
  வாள்அ ரக்கனைக்
கண்டான் உம்பி
  அறம் கடக்கிலான்,
'வண்டார் கோதையை
  வைத்து நீங்கெ'னத்
திண்தே ரான்எதிர்
  சிந்தை சீறினான்.

[ஏகும் — செல்லும். உம்பி — உன் தம்பி. அறம் கடக்கிலான் — அறம் தவறாதவன். வண்டு ஆர் கோதையை — வண்டுகள் மொய்க்கப் பெற்ற பூச்சூடிய கூந்தலையுடைய சீதையை. வைத்து நீங்கு எனா — விட்டுவிட்டு அப்பால் போய் விடு என்று சொல்லி. திண் தேரான் — வலிய தேரையுடைய ராவணன்.]

இனிமேல்தான் போர் வருகிறது—அந்த ஜடாயு — ராவணப் போர்தான். அப்படியே, பல பாடல்களில் அல்ல, சில பாடல்களிலும் அல்ல, ஒரே பாட்டில் வருணிக்கப்படுகிறது. இல்லை, அந்தப் போரே வந்து விடுகிறது! அடுத்த வாரம் பார்க்கலாமே!

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ


362. வானரர் கற்ற வைத்திய பாடம்

அவனே ஆயுதபாணி; இவனே நிராயுதபாணி. ஆயுத மென்றால் சாதாரணமான கொலைக் கருவியா? அவன் தான் சாதாரணமான சத்துருவா?

'ஜடாயு' கதா காலக்ஷேபம்

'கொலைவாள் அரக்கன்' அல்லவா? அந்தக் 'கொலைவாள்' தேவ தேவனாகிய சிவபெருமான் கொடுத்த 'தெய்வ வாள'ல்லவா? வேறு வழியில்லை யென்றால், அந்தத் தெய்வக் கொலை வாளைத் தான் இரக்கமிலா அரக்கன் உபயோகிக்கக் கூசுவானா?

ஆனால், இப்படியெல்லாம் மனத் தராசில் எடை போட்டு வியாபாரம் செய்யும் பேர்வழியா ஜடாயு? 'அறம் கடக்கிலான்' — அறநெறியிலே புகழுக்கு உயிரையும் விற்கத் தெரிந்த தர்ம வியாபாரி!



எனவே, 'சீதாதேவியை விட்டு விட்டு அப்பால் போய்விடு, தம்பி! மரியாதையாக' என்று சொல்லிப் பார்த்தான். அரக்கனுக்குப் புரியுமா அற நெறிப் பேச்சு?

'உடனே என்ன நடந்தது?' என்பதைச் சொல்லுகிறான் அனுமன். அந்தப் போரை நேரில் பார்த்ததில்லை. சொல்லக் கேட்டது தான். ஊகமாய்த்தான் பேசுகிறான். ஆனால் மனக் கண்ணை மலரவிழித்துக் கண்டு காட்டுகிறான், அந்த ஜடாயுவின் ரௌத்திராகாரமான வீராவேசத்தையும் தர்மாவேசத்தையும், தர்மமே வதைக்கப் பெற்றது போன்ற அந்தக் கோர வதத்தையும், 'தெய்வ மரண'த்தையும் :

'சீறித் தீயவன்
ஏறு தேரையும்
கீறித் தோள்கள்
கிழித் தழித்தபின்,
தேறித் தேவர்கள்
தேவன் தெய்வவாள்
வீறப், பொன்றினன்
மெய்ம்மை
யோன்' என்றான்.

[தீயவன் — கொடியவனாகிய ராவணன். அழித்த பின் — ராவண கர்வத்தையும் வீரத்தையும் அழித்த பின். தேறி—நிச்சயித்து. வாள் வீற — வாளை வீசியெறிய. பொன்றினன் — இறந்தான். மெய்ம்மை யோன் — சத்தியமே துணையாகப் போராடிய ஜடாயு.]

திரும்பத் திரும்பப் பாடிப் பாடி (சங்கீத ரீதியில் அல்ல, கவிதா ரீதியில்)

அனுபவிக்க வேண்டிய பாடல்கள், அனுமன் சொல்லும் 'ஜடாயு செய்தி'ப் பாடல்கள் மூன்றும். இம்மும்மணிக ளுக்கும் முடிமணி, முழுமணியாகிய இம்மூன்ருவது பாட்டு.

இம்மூன்ருவது பாட்டைப் பாடிப் பார்க்கவே, அப்படியே பார்த்து விடுகி ரேம் ஜடாயு ராவணனைத் தன் மூக்கா லும் நகங்களாலும் சிறகுகளாலும் கீறிக் கீறிக் கிழித்து அழிக்க முயல் வதையும், அந்த ஹிம்ஸையைப் பொறுக்க முடியாமல் அரக்கன் திண றித் திக்கு முக்காடிச் சற்றுத் தெளிந்து தெய்வவாள் கொண்டு வீசி இந்த கிரா யுதபாணியைக் கொன்று விடுவ தையும்!

தம்பியின் இந்தத் தியாக மரணமா கிய தெய்வமரணத்தைக் கேட்கிருன் ஸம்பாதி ஆச்சரியமாக, ஏதோ ஒரு திவ்ய கதை கேட்பது போலே, ஏதோ ஒரு புராண இதிகாச காலட்சேபம் கேட்பது போலே.

ஸம்பாதியின் புது வாழ்வு

ஆனந்தக் கண்ணீராகிவிடுகிறது ஸம்பாதியின் துக்கக் கண்ணீர்:

விளித்தான்; அன்னது
  கேட்டு, 'மெய்ம்மையோய்!
தெளித்தா டத்தகு
  தீர்த்தன் மாட்(டு)உயிர்
அளித்தா னே! அது,
  நன்று நன்றெனக்
களித்தான், வாரி
  கலுழ்ந்த கண்ணினுன்.

[விளித்தான் — காலட்சேபம் போல் கூறி முடித்தான். அன்னது — அந்தச் சொல். மெய்ம்மையோய் — உண்மை சொல்லும் வானரனே. தெளித்து — (மனம்) தெளிந்து. ஆடத்தகு தீர்த் தன் — புண்ணிய தீர்த்தத்தில் நீராடுவது போல் ஆடி அனுபவித்தற்குரிய கல் யாண குணங்களையுடைய பரிசுத்த மூர்த்தியாகிய ராமன். தீர்த்தன் மாட்டு— ராமன் விஷயமாக. என — என்று. வாரி கலுழ்ந்த — நீரைச் சொரிகின்ற.]

ராம பத்தினியை மீட்பதற்காக உயி ரளித்த ஜடாயுவை இறந்தவனென்று கருதுவதே தவறு என்கிருன் ஸம்பாதி:

உய்ந்தான் அல்ல(து)
  உலந்த(து) உண்மையோ?

[உய்ந்தான் அல்லது — பிழைத்திருக் கிருனே யல்லாமல். உலந்தது — உயிர் ஒழிந்தது.]

'ஜடாயுவா இறந்தவன்? உயிரோ டிருப்பதாகக் கருதும் நானல்லவா இறந் தவன்?' என்று, அனுமனேடு ஒரு தியாக பாடத்தைப் பங்கிட்டுக் கொள் வது போலப் பேசுகிருன் ஸம்பாதி:

அறம்அன் னுனுடன்
  எம்பி அன்பினே(டு)
உற(வு)உன் னு,உயிர்
  ஒன்ற ஒவினுன்;
பெறவொண் ணுதெதார்
  பெற்றி பெற்றவற்(கு)
இற(வு)என் னும்? இதின்
  இன்பம் யாவதோ?

[அறம் அன்னுன் — தருமமே ஒரு வடிவெடுத்தாற் போன்ற ராமன். எம்பி— என் தம்பி ஜடாயு. உறவு உன்ன — உறவு கொண்டாடி. உயிர் ஒன்ற ஒவி னுன் — உயிரையும் மனப்பூர்வமாக விட் டான். பெற ஒண்ணுதது — பெற முடி யாததாகிய. ஓர் பெற்றி — ஒரு பேற் றினை; ஒப்பற்ற பாக்கியத்தை. பெற்ற வற்கு — பெற்றவனுகிய ஜடாயுவுக்கு. இறவு என்னும் — இறப்பு என்பதுதான் என்ன பிரமாத கஷ்டமாகிவிடும்? இதின் இன்பம் — இந்த பாக்கியத்தைக் காட்டிலும் சிறந்த இன்பம் தருவது தான். யாவதோ — வேறு யாதோ.]

இவ்வளவு ஆனந்த பாஷ்பத்திலும் ஆனந்தக் கனவிலும் மறுபடியும் சகோ தர வாத்ஸல்யம் தாக்குகிறது. ஆனந்தக் கண்ணீர், ஏங்கிப் புலம்பி வடிக்கும் கண்ணீராகி விடுகிறது.

கடைசியாகப் பொங்கி வந்த துக் கத்தையும் அடக்கிக்கொண்டு ஸம்பாதி, அனுமன் முதலான வானர வீரர்களை, 'நல்ல கல்வி கேள்வி யுடையவர்கள்' என்றும், 'பொய்யில்லாதவர்கள்' என்

றும் கொண்டாடுகிறான். தம்பியின் தியாக மரணத்தைத் தெரிவித்துத் தன்னை வாழ்வித்ததாகவும் சொல்லு கிறான் :

வாழ்வித் தீர்எனை,
 மைந்தர்! வந்துநீர்
ஆழ்வித் தீரலிர்
 துன்ப ஆழிவாய்!
கேள்வித் தீவினை
 கீறினீர், இருள்
போழ்வித் தீர்,உரை
 பொய்யின் நீங்கினீர்!

[எனை — என்னை. மைந்தர் — மைந்தர்களே. ஆழ்வித்தீர் அலிர் — ஆழ்வித்தீர் அல்லீர்; ஆழச் செய்தீர்கள் இல்லை. துன்ப ஆழிவாய் — துன்பக் கடலுக்குள்ளே. கேள்வித் தீவினை கீறினீர் — கல்வி கேள்விகளால் தீவினையைக் களைந்து விட்டீர்கள். இருள் போழ்வித்தீர் — என்னுடைய அக இருளையும் போக்கிவிட்டீர்கள். உரை பொய்யின் நீங்கினீர் — பொய் பேசுவதிலிருந்து நீங்கி விட்டீர்கள்.]

ஸம்பாதியின் இத்தகைய குதூகலம் அனுமன் முதலான வானர நல்லறிஞர்களுக்கும் அதிசயமாகவே இருந்திருக்கவேண்டும். 'அப்படி என்ன புது வாழ்வு பெற்றுவிட்டார் இவர்!' என்று கூடப் பிரமித்திருப்பார்கள்.

அந்த வாழ்வை இன்னும் ஸம்பாதி சம்பாதித்துக் கொள்ளவில்லை தான். ஆனால் அது விரைவில் வரப்போகிறது — வந்து கொண்டிருக்கிறது — என்பது ஸம்பாதியின் கழுகுக் கண்களுக்கு இலக்காகி விடுகிறது.

வானர வீரர்களை நோக்கி ஸம்பாதி, 'உங்களுடைய சத்திய வாக்கினால், நல்ல சொற்கள் சொல்லும் அந்த நாவினால், தயவு செய்து ராம நாமத்தைச் சொல்லுங்கள். எல்லாரும் சேர்ந்து சொல்லுங்கள். அப்படிச் சொல்லவே அதனால் எனக்கு ஒரு நன்மை உண்டாகும். சிறந்த, ஒப்பற்ற பெரும் பயன் சித்திக்கும்' என்கிறான்:



எல்லீ ரும்மவ்
இராம நாமமே
சொல்லீர்; சொல்ல,
எனக்கொர் சோர்விலா
நல்லீ ரப்பயன்
நண்ணும், நல்லசொல்
வல்லீர்! வாய்மை
வளர்க்கும் மாண்பினிர்!

[எல்லீரும் — நீங்கள் எல்லோரும். சோர்விலா — சோர்வில்லாத, நல் ஈரப் பயன் — நல்ல (அந்த ராமனின்) அன்பின் பயன். நண்ணும் — கைகூடும். வல்லீர் — வல்லவர்களே. வாய்மை — சத்தியம். மாண்பினீர் — மாட்சியுள்ளவர்களே.]

எத்தகைய குழந்தை யுள்ளத்திலிருந்து பிறக்கின்றது இந்தப் பரம பக்தி, பாருங்கள்! ராம நாமோச்சாரணம் நல்லவர் பலர் வாயிலிருந்தும் வெளிப்படும்போது, அது ராமபிரானின் தெய்விக அன்பையும் அருளையும் அப்படியே கொண்டுவந்து காரியசித்தி தந்து விடுகிறதாம்.

அனுமன் முதலான நல்லறிஞர்களுக்கும் இந்தப் பரம விசுவாசம்—பகவந் நாம ஸங்கீர்த்தன பக்தி— இது வரையில் இவ்வளவு தூரம் வாய்த்திருப்பதாகத் தெரியவில்லையே. ராமபக்தி இருக்கலாம்; ஆனால் நாமபக்தியில் இந்தக் கழுகிடம்தான் அந்த வானரர்களும் பாலபாடம் படிக்க வேண்டியிருக்கிறது! அதனால் தான், 'நாம் இதை ஆராய்ந்து பார்ப்போம்' என்று சொல்லிக் கொண்டே, ஸம்பாதியைச் சூழ்ந்து நின்று நாமோச்சாரணம் தொடங்குகிறார்கள்.

என்றான்; 'அன்னது
காண்டும் யாம்!' எனா
நின்றார்; நின்றுழி
நீல மேனி யான்
நன்றாம் நாமம்
நவின்று நல்கினர்,
வன்றோ ளான் சிறை
வானம் தாவவே!

[என்றான்-என்று ஸம்பாதி சொன்னான். அன்னது காண்டும் யாம்—அதை நாம் ஆராய்ந்து காண்போம். எனா—என்று. நின்றார்—ஸம்பாதியைச் சூழ்ந்து நின்றார்கள். நின்றுழி-அவ்விதம் நின்றபடியே. நீலமேனியான் நன்றாம் நாமம்—எல்லையற்ற அழகுக்கும் நன்மைக்கும் ஒரு வடிவமான ராமனது எல்லா நன்மைகளையும் தரத்தக்க திருநாமம். நவின்று நல்கினர்—உச்சரித்து உதவினார்கள். வல் தோளான் சிறை — வலிய தோள்களையுடைய ஸம்பாதியின் சிறகுகள். வானம் தாவவே — (முளைத்து) வானத்தில் பறக்கத் தொடங்கியது.]

கோஷ்டி பஜனை செய்வது போல் 'ராம ராம, ராம ராம' என்று வானர வீரர்கள் உச்சரித்ததும், என்ன ஆச்சரியம்! எங்கே ஸம்பாதி? கீழே இவர்களுக்கு நடுவே இருந்தவன் இப்போது வானத்திலே பறக்கிறான்!

அண்ணன் தம்பிகளான ஸம்பாதியும் ஜடாயுவும் ஒரு காலத்தில் வானத்தில் பறந்து கொண்டே போய்ச் சூரிய மண்டலத்தைக் குறுகி விட்டார்களாம். தம்பி ஜடாயு அண்ணனைக் காட்டிலும் உயரமாகப் பறந்து போய் விட்டான். போனதும் சூரிய வெப்பத்தைத் தாங்க மாட்டாமல் பெரிதும் வருந்தினான். ஸம்பாதி தம்பியைத் தன் சிறகின் நிழலில் வரச் செய்வதற்காக அவனுக்கு மேலே பறந்து சென்றான். அதனால் தம்பி தப்பினான்; அண்ணனோ சிறகு தீய்ந்து கீழே விழுந்து விட்டான்.

அப்போது கரிந்து போன சிறகுகளைத் தான் இப்போது ஸம்பாதி சம்பாதித்துக் கொள்கிறான், ராமநாமத்தின் மகிமைக்குச் சான்றாக.

நெருப்புப்போல் ஜொலிக்கும் உக்கிரமான வாளாயுதம் ஒன்று உறை பெற்றதுபோல விளங்குகிறான் சிறகு பெற்ற கழுகுத் தலைவன். வீர ராமனை வைத்திய ராமனாகக் காட்டிய பெருமை சம்பாதியின் பெருமை.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

363. கழுகு மகாராஜா

பறவை பறக்க முடியாமல் உருண்டுருண்டு வந்ததையும் பார்த்தார்கள். அதே கழுகு, சிறகுகள் தழைக்கப் பறக்கத் தொடங்குவதையும் கண்கூடாகக் கண்டு கொண்டார்கள்.


பக்தி பரவசம்

திகைத்தார்கள் ; பயந்தார்கள் ; வியந்தார்கள் ; ஆச்சரியத்தால் விம்மினார்கள். இந்த அற்புதத்திற்குக் காரணமான நாமத்தையுடைய ராமனை வாழ்த்துகிறார்கள் :

மருண்டார் ; வானவர்
  கோனை வாழ்த்தினார் ;
வெருண்டார் ; சிந்தை
  வியந்து விம்முவார்.

[மருண்டார் — திகைத்துப் போனார்கள். வானவர்கோன் — (இங்கே) தேவ தேவனின் அவதார மூர்த்தியான ராமன்.]

ராம நாமம் தாரக மந்திரமாகி ஸம்பாதிக்கு வேண்டிய பயனை விளைத்தது கண்டு, ‘ராமன் சாதாரண மானுடன் அல்லன், தேவாதி தேவன்’ என்ற தத்துவ ஞானமும் சிறிது பெறுகிறார்கள் வானர வீரர்கள்.



எனினும் அந்த அற்புதத்தைக் கண்டு வியந்து பயந்தவர்கள், தேவதேவனாகிய ராமபிரானுக்காகவும் பயப்படுகிறார்களாம் ; பயந்து வாழ்த்துகிறார்களாம். இது பக்தி பரவசத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று.

‘காலத்திற்கும் தேசத்திற்கும் அதீதமான ஞான ஆகாசம் என்ற பரமபதத்திலே ஆதியஞ் சோதியாக வுள்ள பரம்பொருள் இம் மண்ணுலகத்திலே வந்து கால் நிலந்தோய நின்று கண்ணுக்கு இலக்காகி விட்டதே! இங்கே என்ன தீங்கு வருமோ இந்த அரும் பொருளுக்கு ! — இந்த அழகனுக்கு !’ என்று அனாவசியமாக அஞ்சுகிறார்களாம். அஞ்சி, ‘மங்களம் உண்டாக வேணும் எப்போதும் இத் திருமேனிக்கு ; பல்லாண்டு பல்லாண்டு வாழவேணும், ஜய மங்களத்துடன், இந்த திவ்ய ஸௌந்தரியம் !’ என்றெல்லாம் பொங்கும் பரிவினால் வாழ்த்துகிறார்களாம் வானர வீரர்கள். அன்புப் பெருக்கினால், பக்திப் பெருங் காதலால், தோத்திரம் வாழ்த்தாக முடியும் அதிசயம் இது.

மேலும் பக்தி பரவசத்தால் வானரர்கள், ராமநாமத்தின்

புதை பொருளான திவ்ய சக்தி காட்டி மகா விசுவாசத்தைத் தங்களுக்கு ஊட்டிய கழுகுத் தலைவனைத் தங்கள் ஞான குருநாதனாகவும் கருதியது போல், அஞ்சலி செய்கிறார்கள். செய்து, ஸம்பாதியின் முன்னைய வரலாற்றை அறிந்து கொள்ள விரும்புகிறார்கள்.

ஸம்பாதி செய்தி

'அந்த வரலாறு முழுவதையும் கூறுவாய்' என்று அவர்கள் கேட்க, அவனும் சிறகிழந்த காரணத்தை அவர்கள் மனத்தில் நன்றாய்ப் பதியுமாறு சொல்லுகிறான் :

அன்னானைக்கடி(து)
அஞ்சலித்து, 'நீ
முன்னாள் உற்றது
முற்றும் ஓதெ'னச்
சொன்னார்; சொற்றது
சிந்தை தோய்வுறத்
தன்னால் உற்றது
தான்விளம்புவான்.

[அன்னானை — அந்த ஸம்பாதியை. கடிது — விரைவாக. அஞ்சலித்து — அஞ்சலி செய்து. சொற்றது — தான் சொன்னது. சிந்தை தோய்வுற— அவர்களுடைய சிந்தையில் நன்றாகப் பதியும்படி. விளம்புவான் — கூறலானான்.]

அந்த முன்னைய வரலாற்றை ஸம்பாதி எட்டுக் கவிகளில் ஒரு தொடராய்க் கூறுகிறானாம். ராமன் திருவருள் பெற்றுச் சிறகு பெற்று அந்த நாமோச்சாரண மகிமையை அனுமன் போன்ற வானர வீரர்களுக்கும் வழங்கிய பெருங் கிழவனாரின் பேச்சாகவா இருக்கின்றன இக்கவிகள்? கிழடு தட்டிய வாக்காகத்தான் காண்கிறது. நாம் இக்கவித் தொடருக்கு மேலே பறந்து போய்விட வேண்டியதுதான்!

வானரர் வந்த கதையை ஸம்பாதி தெரிந்துகொள்ள விரும்புகிறான். அவர்கள் சீதையைத் தேடிவந்த வரலாற்றைச் சொல்ல, ஸம்பாதி அவ்விஷயமாகத் தனக்குத் தெரிந்ததையும் தெரிவிக்கிறான் :

பாகொன்று குதலை யாளைப்
பாதக அரக்கன் பற்றிப்
போகின்ற பொழுது கண்டேன்;
புக்கனன் இலங்கை; புக்கு
வேகின்ற உள்ளத் தாளை
வெஞ்சிறை அகத்து
வைத்தான்;
ஏகுமின் காண்டிர், ஆங்கே
இருந்தனள் இறைவி
இன்னும்.


[பாகு ஒன்று குதலையாளை — சர்க்கரைப் பாகு போன்ற மழலைச் சொற்களையுடைய சீதையை. புக்கனன் இலங்கை — இலங்கை சேர்ந்தான். புக்கு — சேர்ந்து. வேகின்ற — வெந்து கொண்டிருக்கிற. வெஞ்சிறை அகத்து — கொடிய சிறைச்சாலையிலே. ஏகுமின் காண்டிர் — போய்க் கண்டு கொள்ளுங்கள். இறைவி — சீதை.]

ராவணன் சீதையை இலங்கையிலே சிறை வைத்திருக்கிறான் என்று செய்தி சொன்ன ஸம்பாதி, 'அந்த இலங்கை உங்களால் அடைய முடியாதது' என்றும் சொல்லுகிறான்: யமராஜாவும் அந்த இலங்காபுரியைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் பயப்படுவானாம்.

யமன் தன்னுடைய பாசக் கயிறு கொண்டு அங்கே பூச்சாண்டி காட்ட முடியாதாம். பாசத்தை யமனோடும் சேர்த்து நீறாக்கிவிடும் சீற்றம் அந்த நீச அரக்கனுக்கு உண்டு என்கிறான் ஸம்பாதி.

'நீங்களோ நல்லவர்கள். ஆனால் நல்ல குணம் போதுமா அந்த நீசனுடைய இராஜ்யத்தை அடைவதற்கு?'

'ஓசனை ஒருநா(று) உண்டால்;
ஒலிகடல் இலங்கை; அவ்வூர்
பாசவெங் கரத்துக் கூற்றும்
கட்புலன் பரப்ப அஞ்சும்;
நீசன்அவ் அரக்கன் சீற்றம்
நெருப்புக்கும் நெருப்பு! நீங்கள்
ஏசறும் குணத்தீர்! சேறல்
எப்பரி(சு) இயைவ(து)?'
என்றான்.



பார்த்து விட்டு, 'ஓஹோ, நீங்கள் எல்லாரும் அந்த இலங்காபுரியில் போய்க் குதித்து விடலாம் என்று தான் எண்ணமோ?' என்கிறான்.

'எல்லாரும் ஒருங்கே போவதென்பது இயலாத காரியம். உங்களுக்குள் அப்பேர்ப்பட்ட வல்லமை சாலி ஒருவன் இருந்தாலும் போதுமே!' என்கிறான். பலர் போய்க் கலவரப் படுத்துவது, குளவிகளின் கூடுகளை ஒருங்கே கலைத்து விடுவதுபோல் ஆபத்தாக முடியும் என்பதும் குறிப்பு.

'யாராவது ஒருவன் மாத்திரம் போக முடியுமானால் போய்ப் பார்க்கலாம். அந்த வல்லமை சாலியும் புத்திசாலியாக நடந்து கொள்ள வேண்டும். அந்த இலங்காபுரியில் தலை மறைவாகத்தான் நடக்க வேண்டும்' என்கிறான்.

[ஓசனை — யோசனை. உண்டால் — உண்டு. ஒலி கடல் இலங்கை — ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த இலங்கை. பாச வெங்கரத்துக் கூற்றும் — கொடிய பாசம் என்ற கயிற்று வடிவமான ஆயுதத்தைக் கையில் கொண்டிருக்கும் யமனும். கட்புலன் — கண்பார்வையை. ஏசறும் குணத்தீர் — குற்றமற்ற நல்ல குணமுள்ளவர்களே. சேறல் — செல்லுதல். எப்பரிசு இயைவது — எவ்வாறு இயலும்; ஒரு வகையிலும் இயலாது.]

அப்படிப் போய், அப்படி மறைந்திருந்து, சீதையை இரகசியமாகவே தான் சந்தித்து வர முடியும் என்பது ஸம்பாதியின் அபிப்பிராயம். 'அப்படி யாராவது பார்த்து வர முடியுமானால், சீதையிடம் ராமன் கூறிய வார்த்தையைச் சொல்லி அந்த "வேகின்ற உள்ளத்"துக்கு ஆறுதல் அளித்து வந்து சேரட்டும்' என்பது ஸம்பாதியின் ஆலோசனை.

புத்திமதி

இப்படி ஸம்பாதி பயமுறுத்தியும், அனுமனைப் போன்ற வானர வீரர்கள் பயப்படுவார்களா? வாலி மகன் தான் பயப்படுவானா? எனவே ஸம்பாதி தன் கழுகுக் கண்களால் ஒரு கணம் கூர்ந்து

'இப்படிச் செய்யமுடியவில்லை யென்றால், ராமபிரான் இருக்கும் இடத்திற்கே திரும்பிப் போய்விடுங்கள். அந்த அழகனிடம் நான் சொன்னதைச் சொல்லுங்கள்,—அதாவது சீதை இலங்கையிலே

சிறையில் இருக்கிறாள் என்று தெரிவியுங்கள்' என்கிறான்.

'என் வார்த்தையை நம்பி அழகனிடம் போய்ச் செய்தி சொல்லுங்கள்' என்றெல்லாம் ஆலோசனை கூறும் ஸம்பாதியை இதோ. பார்த்துக் கொள்ளுங்கள் :

எல்லீரும் சேறல் என்ப(து)
எளிதன்(று) ;அவ் இலங்கை
மூதூர்,
வல்லீரேல் ஒருவர் ஏகி
மறைந்(து)அவன் ஒழுகி,
வாய்மை
சொல்லீரே ; துயரை நீக்கித்
தோகையைத் தெருட்டி மீள்திர் ;
அல்லீரேல், என்சொல் தேறி
உணர்த்துமின் அழகற்(கு)
அம்மா !

[எல்லீரும் — நீங்கள் எல்லாரும். சேறல் — செல்லுதல். இலங்கை மூதூர் — பழமையான இலங்காபுரிக்கு. வல்லீரேல் — வல்லமையுள்ளவரானால். ஏகி — போய். மறைந்து அவன் ஒழுகி — அங்குள்ள அரக்கர்களால் காண முடியாதபடி மறைந்து வசித்து. வாய்மை சொல்லீர் — ராமன் கூறிய உண்மையான வார்த்தையைச் சீதையிடம் சொல்லியவர்களாய். துயரை நீக்கித் தோகையைத் தெருட்டி மீள்திர் — சீதையின் துன்பத்தை நீக்கி அவளைத் தெளியச் செய்து மீண்டு வாருங்கள். அல்லீரேல் — அல்லாவிட்டால். என் சொல் தேறி — என் வார்த்தையை நம்பி. உணர்த்துமின் அழகற்கு — அழகனான ராமனிடம் (சீதை இலங்கையில் சிறையிருக்கிறாளென்று நான் சொன்ன செய்தியைத்) தெரிவியுங்கள்.]

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதே ஸம்பாதி மேலே விசையாகச் சிறகடிக்கிறான். 'கழுகு — ராஜ்யத்திலே மகாராஜா இல்லாததால் அராஜகம் ஏற்பட்டு விடுமே!' என்ற துடிப்புத்தான் இந்தச் சிறகடிப்புக்குக் காரணம்.

எனவே, இந்தச் செய்தியையும் வானரரிடம் விரைவில் தெரிவித்து விசையில் பறந்து போகிறான் :

'காக்குநர் இன்மை யால்,அக்
கழுகினம் முழுதும் கன்றிச்
சேக்கைவிட்(டு) இரியல் போகித்
திரிதரும் ; அதனைத் தீர்ப்பான் ;
போக்கெனக்(கு) அடுத்த; நண்பீர்!
நல்லது புரிமின்' என்னா,
மேக்குற விசையிற் சென்றான்,
சிறையினால் விசும்பு போர்ப்
பான்.

[காக்குநர் இன்மையால் — பாதுகாக்கும் அரசர் இல்லாமையால். கழுகினம் — கழுகின் கூட்டங்கள். கன்றி — வருந்தி. சேக்கை விட்டு — தமது இருப்பிடத்தை விட்டு. இரியல் போகித் திரிதரும் — நிலை கெட்டுத் தடுமாறிப் போகும். அதனைத் தீர்ப்பான் — அந்தக் குழப்பமான அராஜக நிலையைத் தீர்க்கும் பொருட்டு. போக்கு எனக்கு அடுத்த(து) — போவதற்குக் காரணம் எனக்கு நேர்ந்துவிட்டது. நண்பீர் — நண்பர்களே. நல்லது புரிமின் — (நான் மேலே சொன்ன ஆலோசனைகளை நீங்களும் நன்றாக ஆலோசித்துப் பார்த்து) உங்களுக்கு நல்லதென்று தோன்றுவதைச் செய்யுங்கள். என்னா — என்று சொல்லி. மேக்குற — ஆகாச மார்க்கமாக, சிறையினால்— சிறகுகளால். விசும்பு போர்ப்பான் — வானத்தைப் போர்த்தவனாகிய ஸம்பாதி.]

ஸம்பாதி சிறகுகளை இழந்திருந்ததால் தம்பி ஜடாயு கழுகு-ராஜ்யத்தின் மகாராஜாவாக முடிசூட்டப் பெற்றிருந்தானும். அந்த ஜடாயு இறந்து போன தும் கிழ ஸம்பாதிக்கே பழைய 'மகாராஜா' பதவி மீண்டும் கிடைத்து விடுகிறது.

இந்தக் கழுகு ராஜ்யத்தில் கூட, பழைய மகாராஜாவைப் புறக்கணித்து ஒரு கழுகுக் குஞ்சுக்குப் பட்டம் கட்டிவிட, எந்தக் கழுகு — ராஜனும் (மந்திரியும்) துணிந்ததில்லை !

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

364. முகஸ்துதியா, சக்தி ஸ்துதியா ?


'ஸம்பாதி சொன்னதெல்லாம் உண்மைதான்: அந்த இரண்டு ஆலோசனைகளில் ஏதேனும் ஒன்றைச் செய்வதே நலம்' என்று தீர்மானித்தார்கள்.

செய்தியொன்றும் தெரியாத நிலையில், 'தவணை கடந்து விட்டதே; இனி மீண்டு போய் மகாராஜாவின் கோபத்திற்கு இரையாவதினும் தற்கொலை புரிந்து நமனுக்கு விருந்தாவதே நலம்!' என்று எண்ணியிருந்தார்கள்.

'இனி மீண்டு போய் ராம சுக்கிரீவரிடம் ஸம்பாதி சொன்ன செய்தியைத் தெரிவித்தாலும் நாம் நமது கடமையை ஒருவாறு செய்து முடித்ததாகும்' என்று நினைத்தார்கள்.

ஆலோசனை

'ஆனால் நாம் கடல் கடந்து இலங்கைக்கே சென்று சீதையைக் கண்கூடாகக் கண்டு மீண்டுபோய் அந்தச் செய்தியைத் தெரிவிக்க முடியுமானால், ஆஹா, எவ்வளவு விசேஷமாயிருக்கும்!' என்றும் எண்ணிவிட்டார்கள்.



'இப்படிச் செய்வதற்குக் கடல் கடக்க வேணுமே. நமக்குள்ளே கடலைக் கடந்து போய் மீளும் வல்லமையுள்ளவர் யார்?' என்று ஆலோசித்தார்கள்.

ஆலோசித்து, வானரவீரர்கள் தத்தம் வலிமையை எடுத்துச் சொல்லலானார்கள். நீலன் முதலியோர், 'கடல் கடப்பது அடியோடு முடியாத காரியம் எங்களுக்கு' என்று தெளிவாய்ச் சொல்லி விடுகிறார்கள்.

வாலி மகனான அங்கதன்கூட, 'நான் கடல் தாண்டும் சக்தியுள்ளவனாக இருந்தாலும், மீண்டு வரும் சக்தி பெற்றிருக்கவில்லையே!' என்று ஒப்புக்கொள்கிறான். கடல் கடந்து போய்ச் சீதையின் செய்தியை உணர்ந்து கொள்ளக் கூடியவன் தான் அங்கதன். ஆனால் கடல் தாண்டிய களைப்பினால் வலிமை குன்றி மீண்டுவர முடியாதாம். எனவே, 'நான் போய்த்தான் என்ன பயன்?' என்கிறான்.

இப்படி வாலி மகன் முதலான வானர சிரேஷ்டர்களும் பின் வாங்கிப் பேசுவதைப் பாருங்கள்:

நீலன் முதற்பேர்
 போர்கெழு கொற்ற
 நெடுவீரர்
சால உரைத்தார்,
 வாரிக டக்கும்
 தகவின்மை;
'வேலை கடப்பன்,
 மீள மிடுக்கின்(று)!'
 எனவிட்டான்,
வாலி அளிக்கும்
 வீர வயப்போர்
 வசைஇல்லான்.

[நீலன் முதற்பேர் — நீலன் முதலாகிய. போர்கெழு கொற்ற நெடுவீரர் — போரில் மிக்க வெற்றி பெறுவதற்கு உரிய சிறந்த வீரர்கள். சால உரைத்தார் — தெளிவாகச் சொல்லி விட்டார்கள். வாரி கடக்கும் — கடலைத் தாண்டிச் செல்லும். தகவின்மை — தகுதியின்மையை. வேலை கடப்பன் — கடலைக் கடந்து விடுவேன் நான். மீள மிடுக்கு இன்று — மீண்டு வரும் வல்லமை இல்லை. என விட்டான் — என்று கூறிவிட்டான். வாலி அளிக்கும் — வாலி பெற்ற. வீர வயப் போர் வசை இல்லான் — வீரமும் வெற்றியும் காட்ட வல்ல போரிலே வசை இல்லாத அங்கதன்.]

ஜாம்பவான் பேச்சு

பிறகு ஜாம்பவான் கூடத் தன்னாலும் கடல் கடக்க முடியாது என்கிறான். திருமால் உலகளந்த காலத்திலே அந்த வெற்றிச் செய்தியைப் பறையறைந்து சாற்றிப் பிரசாரம் செய்து கொண்டே எட்டுத் திக்குக்களிலும் சுற்றித் திரிந்தானாம் ஜாம்பவான்.

அப்பேர்ப்பட்டவனும் இப்போது இந்தத் தெற்குக் கடலைத் தாண்டமுடியவில்லை யென்றால், ஏதாவது ஒரு காரணம் இருக்க வேண்டாமா? அப்படிப் பறைக் கொட்டும் கையுமாகச் சுற்றி வருகையில் காலில் மேருமலை தடுக்கிவிட்டதாம். ஏதோ ஒரு கல் தடுக்குவது போலத்தான் அந்த மலை தடுக்கி யிருக்கிறது இந்தப் பேர்வழியின் காலிலே! ஐயோ, பாவம்!

ஆனால், பொல்லாத காலம்! கால் கொஞ்சம் ஊனமாகி விட்டது:

மாதிரம் எட்டும்
 சூழ்பறை வைத்தே
 வர,மேரு
மோத இளைத்தே
 தாள்உலை வுற்றேன்!

[மாதிரம் எட்டும் — எட்டுத் திக்குகளிலும். சூழ் பறை வைத்தே வர — பிரதட்சிணமாகப் பறையடித்து வருகையில். மேரு மோத — மேருமலை தாக்க. இளைத்தே — வலிமை குன்றி. தாள் உலைவுற்றேன் — கால் சிறிது ஊனமாகி வருந்தினேன்.]

அப்படிக் கால் ஊனமாகி விட்டதால் தான் கடல் மீது எழும்பித் தாவி இலங்கை மதில் மீது குதித்துப் போக இயலாது என்கிறான் ஜாம்பவான். 'இப்படியே போய்க் கொடிய அரக்கர்களை நடுங்கச் செய்து சீதா தேவியைக் கண்டு திரும்ப முழு வலிமையும் எனக்கு இல்லையே!' என்பது இந்தப் பெருங் கிழவனரின் பெரு வருத்தம்.

சிகரத்திலே பூஜை

பிறகு ஜாம்பவான், சும்மா நின்று கொண்டிருக்கும் ஒரு வானர வீரனை அழைக்கிறான்:

காலனும் அஞ்சும்
 காய்சின மொய்ம்பின்
 கடைநின்றீர்;
ஆலம் நுகர்ந்தா—
 னெமென வெம்போர்
 அடர்கிற்பீர்.

[காலனும் அஞ்சும்—யமனும் நடுங்கத்தக்க. காய்சின மொய்ம்பின் கடைநின்றீர் — கடுங் கோபத்தோடு கூடிய வலிமையின் முடிவில் நின்றீர்; அத்தியந்த பலம் உடையீர். ஆலம் — ஆலகால விஷம். நுகர்ந்தானெமென — உண்ட சிவபெருமானைப்போல. வெம்போர் — கொடும்போர். அடர்கிற்பீர் — புரியவல்லீர்.]

அந்த வானரவீரன் இன்னும் சும்மா தான் இருக்கிறான், ஒன்றும் விளங்காத 'பிரகிருதி' போலே! ஜாம்பவான் மேலும் புகழ்கிறான் :

வெப்புறு செந்தீ
நீர்வளி யாலும்
விளியாதீர் ;
செப்புறு தெய்வப்
பல்படை யாலும்
சிதையாதீர் ;
ஒப்புறின் ஒப்பார்
நும்மல(து) இல்லீர்;
ஒருகாலே
குப்புறின் அண்டத்(து)
அப்புற மேயும்
குதிகொள்வீர்.

[வெப்புறு செந்தீ — வெப்பம் பொருந்திய செந்நிறமுள்ள நெருப்பு. வளி — காற்று. விளியாதீர் — இறவாது நிற்பீர். செப்புறு — சிறப்பாகச் சொல்லும். தெய்வப் பல்படையாலும் — தெய்வப் படைக்கலங்கள் பலவற்றாலும். ஒப்புறின் — (எவரேனும்) ஒப்பாக இருந்தால். நும்அலது இல்லீர் — உம்மையே அல்லாமல். ஒப்பார் அல்லது உவமை யாவார் — வேறொருவரையும் பெறாமல் இருப்பீர்; உமக்கு நீரே ஒப்பாயிருப்பீர். ஒருகாலே குப்புறின் — ஒருதரம் குதிக்கும்போதே.]

இன்னும் அந்த வானரன் பேசாமல் தானிருக்கிறான். 'ஏன் இந்த ஜாம்பவான் இப்படி யெல்லாம் நம்மைப் புகழ்ந்து பேச ஆரம்பித்து விட்டார்?' என்று திகைத்துப் போனவன் போலே! ஜாம்பவானே,

நல்லவும் ஒன்றோ,
தீயவும் நாடி,
நவைதீரச்
சொல்லவும் வல்லீர் ;
காரியம் நீரே
துணிகிற்பீர் ;



வெல்லவும் வல்லீர் ;
மீளவும் வல்லீர்;
மிடல்உண்டேல்,
கொல்லவும் வல்லீர் ;
தோள்வலி யொன்றும்
குறையாதீர்.

[நல்லவும் ஒன்றே தீயவும் நாடி — (எந்தக் காரியத்தை ஆராய்ந்தாலும் அதிலுள்ள) அனுகூல அம்சங்களை மட்டும் அல்லாமல் பிரதிகூல அம்சங்களையும் சேர்த்துப் பார்த்து ஆராய்ந்து. நவை—குற்றம். துணிகிற்பீர் — முடிவு செய்யும் அறிவாற்றல் உடையீர். மிடல் உண்டேல் — பகைவர்கள் வலிமையுடையவர்களாக வந்து எதிர்த்தால். ஒன்றும் குறையாதீர் — சிறிதும் குறையாத தன்மையுடையீர்.]

வேறு எந்த வழியாலும் கொல்லமுடியாத வாலியையும் மதிவன்மையால் வென்று விட்டானும் இந்த வானரன் :

அறிந்து திறத்தா(று)
எண்ணி அறந்தா(று)
அழியாமை,
மறிந்து ருளப்போர்
வாலியை வெல்லும்
மதிவல்லீர்

[திறத்து ஆறு — திறமான வழி. அறத்து ஆறு அழியாமை — (வலியால் அழிந்து கொண்டிருந்த) அறநெறி அழிந்து போகாமல். மறிந்து உருளப் போர் வாலியை வெல்லும் மதிவல்லீர் — போர்த்திறமுள்ள வாலியை விழுந்து உருளும்படி வெல்லுதற்குச் சூழ்ச்சி செய்த மதிவன்மை யுடையீர்.]

என்கிறன் ஜாம்பவான்.

அப்படி வாலியையும் வென்ற மதிவன்மையுள்ள இந்த வானரன் யார்? சொல்லவா வேணும்? சுக்கிரீவனை ராமனுடன் நட்புச்செய்வித்த அனுமன் தானே ?

'முதலில் கொடுந் தொழில் வாலியைக் கொன்று சுக்கிரீவனை அரசனுக்கி நெடும்படை கூட்டிப் பிறகு சீதையைத் தேடினல்தான் காரியம் இனிது நிறைவேறும்' என்று ஆலோசனை சொன்னவ னல்லவா?

இத்தகைய அனுமனை ஜாம்பவான் மேலும் புகழ்கிறன்,

நீதியின் நின்றீர் ;
வாய்மை அமைந்தீர்

என்றெல்லாம்.

புகழ்ச்சியின் சிகரமாக வருகிறது இதோ ஜாம்பவான் வாயிலிருந்து அனுமபராக்கிரமம் :

அடங்கவும் வல்லீர்,
காலம் அதன்றேல் ;
அமர்வந்தால்
மடங்கல் முனிந்தால்
அன்ன வலத்திர் ;
மதிநாடித்
தொடங்கிய(து) ஒன்றே,
முற்றும் முடிக்கும்
தொழில்வல்லீர் ;
இடங்கெட வல்லே
ஊறு கிடைத்தால்
இடையாதீர்.

[அடங்கவும் வல்லீர், காலம் அதன்றேல் — காலம் இல்லாத காலத்தில், அதாவது அடங்கி யிருக்க வேண்டிய காலத்தில், அடங்கி யிருக்கும் வல்லமை யுடையீர். அமர் — யுத்தம். மடங்கல் — சிங்கம். முனிந்தால் அன்ன — கோபித்தால் போன்ற. வலத்தீர் — வலிமை யுடையீர். மதி நாடி — மதியினல் நாடிப் பார்த்து. தொடங்கியதொன்றே, முற்றும் முடிக்கும் தொழில் வல்லீர் — தொடங்கிய காரியம் ஒன்றே யல்லாமல் அது சம்பந்தமான எல்லாவற்றையும் செய்து முடிக்கும் திறமையுடையீர். இடம் — (இங்கே) ஏற்ற சமயம். வல்லே — விவரமாக. ஊறு—இடையூறு. கிடைத்தால் — நேர்ந்தால். இடையாதீர் — சோர்ந்து பின்வாங்காதீர்.]

இவ்வளவு புகழ்ச்சியும் இப்போது முகஸ்துதியாகத் தோன்றுமல் உண்மையாகவே தன் சக்தியாகத் தோன்றுகிறது அனுமனுக்கு. நாணித் தலை குனிந்து தான் கேட்டுக் கொண்டிருக்கிறன். எனினும் அகத்திலே சக்தி மலர்ந்து முகமும் மலர்கின்றது.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

365. வானுற ஓங்கிய தன்னம்பிக்கை

சகலவேத சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்த பண்டித னல்லவா? பெரும் பாலும் சிரிப்பதில்லை.

பாண்டிதர் நீரே

[பாண்டிதர் — பண்டிதர்]

என்று அனுமனுடைய பண்டிதப் பட்டத்தை நீட்டி முழக்கினான் ஜாம்பவான்.

சிரிப்பும் சிந்தனையும்

இத்தகைய பண்டிதனுக்கும் சிரிப்பு வந்துவிடுகிறது, ஜாம்பவானின் முகஸ்துதி கேட்டதும். கவிழ்ந்த முகமும் குவிந்த கையுமாக இருந்த இந்த அறிவானுடைய சிரிப்பு, தாமரை மலரின் நடுவில் செவ்வாம்பல் மலர்ந்தாற் போலத் தோன்றுகிறதாம்.



'சிரிப்பான் அறிவாளன்' என்று கவி கூறுவதிலிருந்து, அனும பண்டிதனின் முகத்தினிடையே செக்கிற வாய் விரிந்து சிரிக்கத் தொடங்கிய அந்தச் சிரிப்பு ஒரு பெருஞ் சிரிப்பாகவே நிகழ்வதாய் ஊகிக்கலாம்.

சிரித்தறியாத ஒரு ஜெர்மன் பண்டிதர் அபூர்வமாகச் சிரிக்க ஆரம்பித்ததும் அந்தச் சிரிப்பு ஏககாலத்தில் அநேக குதிரைகள் கனைப்பது போல் ஒலி செய்ததென்று பேராசிரியர் கார்லைல் வருணித்திருக்கிறார்.

அந்தப் பண்டிதருக்குப் பைத்தியமே பிடித்து விட்டதோ என்ற கவலை கூட நண்பர்களுக்கு ஏற்பட்டதாம். வாராது போல வந்த சிரிப்பைப் பண்டிதரால் அடக்கவே முடியவில்லையாம்.

ஆனால் இந்த அனும பண்டிதன் அவ்வளவு பெரும் பைத்தியச் சிரிப்பில் தன்னை இழந்துவிட வில்லை. வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டதுடன், அடக்கத்தோடும் சிந்தனையோடும் ஜாம்பவான் சொல்லையும் அங்கீகரித்துப் பேசுகிறான்.

தன்னைப் புகழ்ந்து இலங்கைக்குப் போகும்படி சொன்ன அந்த ஜாம்பவானுக்கு மட்டும் அந்த மேரு மலை தடுக்கிக் காலில் காயம் படாமலிருந்தால், அந்தப் பெருங்கிழவனே மன வேகத்தினும் மிகுந்த வேகத்துடன் தென் கடலை ஒரே தாண்டாகத் தாண்டிச் சீதாதேவியை மீட்டுக் கொண்டு வந்திருக்கக் கூடும் என்று சிந்திக்கிறான் அனுமன்.

என், ஏழு கடலையும் தாவி எல்லா உலகத்தோரையும்

வெல்லக் கூடிய போராற்றலும் பெருங் கிழவனுக்கு உண்டு என்கிறான் அனுமன். 'இத்தகைய வல்லாளகண்டன் என்னையும் ஒரு பொருட்டாக எண்ணி இப் பெரும் புனித கைங்கரியத்தில் ஏவுகிறானே!' என்று பரவசமாகிறான் அனுமன்.


ஜாம்பவானுடைய நீண்ட அனுபவ அறிவுக்கு முன் அனுமனும் தன்னுடைய அறிவைப் 'புலமை தீர் புன்மை' — அதாவது புலமையோ பாண்டித்தியமோ சிறிதுமில்லாத அற்ப நிலை தான் — என்றே சொல்லிக் கொள்கிறான்.

இனி இத்தகைய அடக்கத்தோடு கூடிய போராற்றலையும், பேச்சுத் திறனையும் வெளியிடும் செய்யுளைப் பார்க்கலாம்:

நீயிரே நினைவின் முன்னே
நெடுந்திரைப் பரவை ஏழும்
தாய்,உல கனைத்தும் வென்று,
தையலைத் தருதற்(கு) ஒத்தீர்,
'போய்இது புரிதி' என்று
புலமைதீர் புன்மை காண்
டற்(கு)
ஏயினிர் என்னின், என்னிற்
பிறந்தவர் யாவர் இன்னும்?

[நீயிரே – நீங்களே; தேவரீர். நினைவின் முன்னே – நினைப்பதற்கு முன்பே; மிக விரைவில். நெடுந்திரைப் பரவை ஏழும் – பெரிய அலைகளையுடைய ஏழு சமுத்திரங்களையும். தாய் – தாவி. தையலை – (இங்கே) சீதாதேவியை. தருதற்கு ஒத்தீர் – மீட்கும் திறன் உடையீர். புரிதி – புரிவாய்; செய்வாய். காண்டற்கு – காண்பதற்கு. ஏயினிர் – ஏவினீர். என்னின் – என்றால். என்னிற் பிறந்தவர் யாவர் இன்னும் – என்னைப் போல் பாக்கியசாலி வேறு யார் இருக்கிறார்.]

'என்னுடைய ஆற்றல் – மகிமையால் அல்ல, உம்முடைய ஏவல் – மகிமையால் அடியேன் அந்த ஏவலைச் செய்து முடிப்பேன்!' என்கிறான் அனுமன்:



இலங்கையை இடந்து
வேரோ(டு)
இவ்வயின் தருகென்றாலும்,
விலங்கினர் தம்மை
யெல்லாம்
வேரொடும்
விளியநூறிப்
பொலங்குழை மயி
லைக் கொண்டு
போதெனப் புக
ன்றிட் டாலும்,

கலங்கலீர், உரைத்த மாற்றம்
முடிக்குவல், கடிது காண்டிர்!

[இடந்து — வேரோடு பெயர்த்தெடுத்து. இவ்வயின்—இவ்விடத்தில். தருக என்றாலும் — கொண்டு வர வேண்டுமென்று நீங்கள் சொன்னாலும். விலங்கினர் தம்மை — இடையூறு செய்யும் அரக்கர்களை. விளிய நூறி — அழியுமாறு நொருக்கி. பொலங்குழை மயிலை—பொன்னாலாகிய குழையென்னும் காதணி அணிந்த மயில் போல் சாயலையுடைய சீதையை. கொண்டு போதென—எடுத்துக்கொண்டு வா என்று. புகன்றிட்டாலும் — சொன்னாலும். கலங்கலீர் — அது எப்படி முடியும் என்று கலங்க வேண்டாம். உரைத்த மாற்றம் முடிக்குவல் — சொன்ன சொற்படியே செய்து முடிப்பேன். கடிது காண்டிர் — விரைவில் காண்பீர்கள்.]

அடங்கிக் கிடந்த எரிமலையொன்று வெடித்துக் கிளம்புவதுபோலக் கிளம்புகிறது அனுமனுடைய இந்த உத்ஸாகப் பேச்சு.

இவ்வளவு உத்ஸாகத்திலே அரக்கர்களை யெல்லாம் தானே வதஞ்செய்து ராமனுக்குச் சிறிதும் சிரமமில்லாமலே சீதையை மீட்டுக்கொண்டு வருவதுகூட எளிதாகவே தோன்றுகிறது:

நீசரை யெல்லாம் நூறி
நினைத்தது முடிப்பல் பின்னும்!

[நீசரை — இழி தொழில் புரியும் அரக்கர்களை. நூறி — அடியோடு அழித்து. முடிப்பல்—முடித்து விடுவேன். பின்னும் — மேலும்.]

இதயத்திலே இரக்கமில்லாமல் பழி தொழில் புரிந்து உலகத்தை ஹிம்ஸிக்கும் அரக்கர்களும் ராட்சஸ சுபாவம் உள்ளவர்களுமே நீசர்கள் என்பதும், மற்றப்படி ஜாதியால் நீசர் இல்லை என்பதும் கம்பன் கொள்கை.

சிறகுகளும் முளைக்கின்றன!

இப்படியெல்லாம் தர்மாவேசத்துடன் தெய்விக குதூகலமாய்ப் பேசி வரும் அனுமனுக்கு, கடல் தாண்டிப் போகவேண்டும் என்ற ஆசை அதிகரிக்கவே, அப்படியே பறந்து போகச் சிறகுகள் முளைத்துவிட்டது போன்ற ஓர் உணர்ச்சியும் உண்டாகிறதாம்.

ஆம்; இரண்டு பக்கத்திலும் இரண்டு சிறகுகள்; தொகுதியான பெரிய இரண்டு கருடச் சிறகுகள்! எப்படி இச் சிறகுகள் கிடைத்திருக்கின்றன பாருங்கள்:

இற்றை நும்] அருளும், எங்கோன்
ஏவலும், இரண்டு பாலும்
சுற்றைவார் சிறைக ளாகக்
கலுழனிற் கடப்பல் காண்டிர்!

[இற்றை — இப்பொழுது. நும் அருளும் — நீங்கள் (ஜாம்பவான் முதலானவர்கள்) என்மீது வைத்திருக்கின்ற அருளும். எங்கோன் ஏவலும் — எமது தலைவனாகிய ராமனது கட்டளையும். இரண்டு பாலும் — இரண்டு பக்கத்திலும். சுற்றைவார் சிறைகளாக — தொகுதியான நீண்ட சிறகுகளாய் அமைய. கலுழனின் — கருடன் போல. கடப்பல் — கடலைக் கடப்பேன். காண்டிர் — காண்பீர்கள்.]

முன்பு ராமன் கட்டளை யிட்டதும், அந்தக் கட்டளைப்படியே செய்யுமாறு சொல்லி இப்போது ஜாம்பவான் முதலானோர் தன் மீது அன்பு வைத்திருப்பதும், அனுமனுக்கு இரு பெருந்துணையாய் இரண்டு சிறகுகளாக அமைகின்றனவாம். அமையவே, அனுமன் கருடனைப் போல் பறந்து விடலாமென்று குதூகல மடைகிறான்!

இத்தகைய குதூகலத்துடன், 'நான் இலங்கைக்குப் போய் மீளும் வரையும் விடையளித்து நீங்கள் இங்கே இனிது தங்கியிருங்கள்' என்று விநயமாகச் சொல்லி விட்டு மகேந்திர மலையுச்சியை அடைகிறான், ஜாம்பவானும் நண்பர்களும் குட்டும் புகழ்மாலைகளுடன்:

ஆண்(டு)அவர் உவந்து வாழ்த்த,
அலர்மழை அமரர் தூவச்,
சேண்தொடர் சிமயத் தெய்வ
மகேந்திரத்(து) உம்பர்
சென்றான்.

[ஆண்டு — அப்பொழுது. அவர் — அந்த வானரர். அலர் மழை — மலர் மழை; பூமாரி. அமரர் — தேவர்கள். சேண் தொடர் — வானளாவிய. சிமயம்— உச்சி. தெய்வ மகேந்திரத்து — தெய்வத்தன்மையுள்ள மகேந்திரமலையில். உம்பர் — மேலிடம்.]

வானரர் வாழ்த்த, வானவர் பூமழை பொழிய மகேந்திரமலை உச்சியை அடைந்து நின்ற அனுமன் பேருருவம் கொள்கிறான். பூவுலகம் ஓர் அடிக்குள் அடங்குமாறு அளந்து நின்ற நெடுமால் வானை அளப்பதற்கு உயர எடுத்த திருவடி போல் அனுமனும் வானளாவ வளர்ந்து நிற்கிறானும்.

தூணும் பாத சிலையும்

சூரியாஸ்தமனத்திற்குள் இலங்கையை அடைய வேண்டும் என்ற கருத்துடன் மகேந்திர மலை மீது பேருருவம் கொண்டு சித்தமாக நிற்கிறான் :

மின்நெடுங் கொண்டல், தாளின்
　வீக்கிய கழலின் ஆர்ப்ப,
தன்நெடுந் தோற்றம் வானோர்
　கட்புலத்(து) எல்லை தாவ,
வன்னெடுஞ் சிகர கோடி
　மகேந்திரம், அண்டம் தாங்கும்
பொன்நெடுந் தூணின் பாத
　சிலையெனப், பொலிந்து
　　　　　　நின்றான்.

[மின் நெடுங் கொண்டல்-மின்னலையுடைய பெரிய மேகங்கள். தாளின்— காலில். வீக்கிய-கட்டிய. கழலின்— வீரக் கழல் போல. ஆர்ப்ப-ஒலிக்க. நெடுந் தோற்றம்-பேருருவம். வானோர் கட்புலத்து எல்லை தாவ—தேவர்களின் கண்களாகிய இந்திரியங்களிடத்தில் புலனாக. வல் நெடுஞ் சிகர கோடி மகேந்திரம் — வலிய பெரிய சிகரங்களின் தொகுதியையுடைய மகேந்திர மலை. அண்டம் — உலக உருண்டை. பொன் நெடுந் தூணின்—பொன் மயமாகிய நீண்ட தூணின். பாத சிலையென—அடியில் இட்ட கல்லைப் போல. பொலிந்து நின்றான்—விளங்கித் தோன்றினான்.]

மகேந்திர மலை மீது ஏறிப் பேருருவம் கொண்டு அண்டத்தின் மேல் முகடு வரை வளர்ந்தோங்கி நிற்கும் அனுமன், அண்டத்தைத் தாங்கி நிற்கும் ஒரு பெருந் தூண் போலக் காண்கிறானும். அனுமனைத் தாங்கி நிற்கும் மகேந்திர மலையோ அனுமனது பெரு வடிவுக்கு மிகவும் சிறந்துக் காண்கிறது, ஓர் அழகிய பெருந் தூணின் கீழே வைத்திருக்கும் 'பாத சிலை' என்ற கல்லைப் போலே.

இப்படி வானுற ஓங்கி வளர்ந்த தன்னம்பிக்கையோடு அனுமன் நிற்கும் நிலையுடன் முற்றுப்பெறுகின்றது கிஷ்கிந்தா காண்டம். இப் 'பொன் நெடுந் தூண்' எவ்வளவு ஜாக்கிரதையாக, எவ்வளவு விரைவாக, எவ்வளவு சக்திமயமாக இயங்கித் தொழிற்படப் போகிறது என்பதெல்லாம் அடுத்த சுந்தர காண்டத்திலே.

அடுத்த வாரம் கிஷ்கிந்தா காண்டத்தை ஒரு பொது நோக்காக விமர்சனம் செய்து பார்ப்போம்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ

366. கிஷ்கிந்தா காண்டத்தின் ஸ்தானம்

கம்ப ராமாயணத்தின் கட்டுக்கோப்பிலே தென்னாட்டுத் திருக்கோயில்களின் கட்டடக் கலையொளி வீசுகிறது. தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயில் முதலான பெருங்கோயில்களிலே சஞ்சரிப்பது போன்ற உணர்ச்சி உண்டாகிறது கம்பனுடைய காவியப் பெருங் கோயிலில் சஞ்சரிக்கும்போது.

காண்டங்களும் படலங்களும் இப்பெருங் கோயிலின் பகுதிகள். இப்பகுதிகளெல்லாம் கோயிலோடு கோயிலாக இசைந்திருக்கின்றன, இழைக்கப் பெற்றிருக்கின்றன.

'வால்மீகியைப் பின்பற்றும் இடங்களிலும் சரி, விலகிச் செல்லும் இடங்களிலும் சரி, கம்பனின் கவிச் சிற்பத் திறனுடைய கட்டுக்கோப்பு இவனது அபூர்வ மேதைக்குப் பொருத்தமாகவே அமைந்திருக்கிறது' என்று பேரறிஞர் வ. வே. சு. ஐயர் எடுத்துக்காட்டியுள்ளார்.


கம்ப ராமாயணம் என்ற பெருங்கோயிலுக்கு முன் வாசற் பூஞ்சோலையாக அமைந்திருக்கிறது பாலகாண்டம்.

மந்த மந்த
நடந்தது வாடையே

என்று வருணிக்கப்பெறும் பூங்காற்றைப் போல் மந்தமாகச் செல்லுகிறது காவியகதி பாலகாண்டத்திலே.

இந்த முகப்புக் காண்டத்திலும்கூட நம் கவிஞன் ராமாயணத்தின் தனிப்பெரு நிகழ்ச்சியை விட்டு விடவில்லை. இதைப் 'பெரிய காரியம்'—அதாவது ராமன் அவதரித்து வந்த காரியம்—என்று குறிப்பிடுகிறான் கம்பன் இக்காண்டத்திலே.

இதுதான் அவதாரப் பெருநோக்கமாகிய துஷ்ட நிக்கிரக சிகரமாகிய ராவண வதம். இதுதான் ராமாயணத் தனிப்பெரு நிகழ்ச்சி என்ற நாணயத்தின் முக்கியமான பகுதி. இந்த நாணயத்தின் மறு பகுதிதான் சிஷ்டபரிபாலனமாகிய தர்மபரிபாலனம்.



இத் தனிப் பெரு நிகழ்ச்சியைக் கம்பன் மறப்பதே இல்லை. இதற்காகத் தோன்றிய ராமனைக் கம்பன் பரம்பொருளின் அவதாரமாகவே கருதுகிறான். ஆனால், இந்த அவதார வெற்றி மானுடத்தின் வெற்றி

யாகவே சித்திரிக்கப்படுகிறது. மனிதச் சட்டையில் வந்தவன் மனிதனாகவே நடிக்கிறான், நடந்து கொள்கிறான்.

முதலாவது காண்டத்திலும் தனிப் பெருநிகழ்ச்சியை மறந்துவிடாத கவிஞன்,காவியத்தின் உண்மையான ஆரம்பமாகிய அயோத்தியா காண்டத்தில் நன்றாக 'ராவண வதம்' என்ற பெரு நோக்கத்தை நினைவில் கொண்டிருக்கிறான் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.


இன்னல்செய் இராவணன்
  இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக்
  கூனி தோன்றினாள்

என்று கூனியைக் காவியமேடையில் தோற்றுவிப்பதைப் பாருங்கள்.

பால காண்டத்திலே மந்தகதியில் நடந்த கதை அயோத்தியா காண்டத்தில் விரைந்து செல்லுகிறது. மலைவீழ் அருவி போல வந்து விழுகிறது இக் காண்டத்தின் தொடக்கத்திலேயே.

ராமாயணக் கோவிலில் முதலாவது மாடமாக அமைந்திருக்கும் அயோத்தியா காண்டம், கவிதா சங்கதத்திலும் கட்டங்களின் அமைப்பு முறையிலும் அதிசய வெற்றியை அடைந்திருக்கிறது. இக் காண்டத்தின் சிற்பத்திறன் அற்புதமானது.

இரண்டாவது மாடமாகிய ஆரணிய காண்டத்தை ராமாயணத்தின் இதயப் பிரவேசம் என்று சொல்ல வேண்டும். இங்கே தோன்றும் சூர்ப்பணகையை,



நீலமா மணிநிற
நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற
முடிக்கும் மொய்ம்பினுள்.

என்று அறிமுகப் படுத்துவதைப் பாருங்கள்.

இந்த ராம—சூர்ப்பணகை சந்திப்பிலிருந்துதான் சீதா—ராமர் பிரிவு ஏற்படுகிறது : இது ராவண வதத்திற்கு 'ராஜ பாதை'யாகிறது.

மூன்றாவது மாடமாகிய கிஷ்கிந்தா காண்டத்திற்கு ராமாயணத்துடன், நெருங்கிய அவயவ சம்பந்தம் இல்லை. ஒரு பெரிய கோயிலில் ஒரு சிறிய தனிக் கோயில் போல் ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கிறது இக்காண்டம்.

இக்காண்டத்திலே புதிய கதாபாத்திரங்களாக வருகிறார்கள் வானரர்கள். முதல் முதல் அனுமன் தோன்றுகிறான். பிறகு, சுக்கிரீவன் தோன்றுகிறான். ராமன் சுக்கிரீவனோடு நட்புரிமை கொண்டு வாலிவதம் செய்கிறான். வாலி வதத்திற்குப் பின் சுக்கிரீவன் வானர ராஜ்யத்தின் மகாராஜாவாகி, சீதையைத் தேடும் பொருட்டு வானர வீரர்களை எல்லாத் திசைகளிலும் அனுப்பி வைக்கிறான்.

இதற்கு அடுத்த சுந்தரகாண்டம் மிகவும் முக்கியமானது. இதிலே தான் அனுமன் சீதையைக் கண்டு பிடிக்கிறான். சீதையை ராவணன் சந்திப்பது, சீதையின் தனிமொழி, அனுமன் கணையாழி கொடுப்பது, அனுமனுடைய சாகஸச் செயல்கள், பிடிபட்டுத் தூது உரைப்பது, லங்காதகனம், திரும்பி வந்து ராமனிடம் செய்தி தெரிவிப்பது முதலான காட்சிகளெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக மலர்ச்சி பெறுகின்றன.

சுந்தர காண்டத்தின் கட்டுக்கோப்பு இயற்கையாகவும் சுந்தரமாகவும் அமைந்திருக்கிறது. இக் காண்டத்திற்கும் முதல் மூன்று காண்டங்களுக்கும் ஒரு வகைத் தொடர்பு ஏற்படுத்துவது தான் கிஷ்கிந்தா காண்டம்.

யுத்தகாண்டம் கம்பனுடைய காவியக் கோயிலுக்கு ஒரு பெருங் கோபுரமாக அமைகிறது. இக் கோபுரத்துடன் அவயவ சம்பந்தம் இல்லாமலே ஒரு கொடி பறப்பது போலக் காண்கிறது இரணியன் கதை.

இத்தகைய பெருங் கோயிலில் அவயவ சம்பந்தம் இல்லாத ஒரு சிறு கோயில் போலக் காணப்படும் கிஷ்கிந்தா காண்டத்திலே காவியத்திற்குள்ளே ஒரு குட்டிக் காவியம் என்று சொல்லும்படி அமைந்திருக்கிறது வாலி கதை.

எனினும் இக்காண்டத்திலே ராம லட்சுமணரின் சோகமும், சுக்கிரீவன் ஆறுதல் கூறுவதும், உதவி புரிவதும், சுக்கிரீவனுடைய வானரப் படைவீரர்கள் எங்கும் தேடித் திரிவதும் தான் காவியப் போக்கிற்கு இன்றியமையாத நிகழ்ச்சிகள்.

'வாலி காவியம்' சிறப்பாக அமைந்துவிட்ட போதிலும், பொதுவாகக் கிஷ்கிந்தா காண்டத்தில் கம்பனுடைய சங்கீதத்தையாவது கவிச்சிறப்புத் திறமையையாவது விசேஷமாய்க் காண இயலவில்லை.

'கடல் கண்டோம் என்பர். யாவரே முடிவுறக் கண்டார்' என்று கம்பன் இக்காண்டத்திலே கூறுவது வானர சேனைப் பெருமையுடன் இக்காவியத்தின் பெருமையையும் புலப்படுத்துமென்று கூறுவதுண்டு. இப்பெருமையில் விசேஷமான பங்கு கிஷ்கிந்தா காண்டத்திற்கு இல்லாவிட்டாலும், இச்சிறு கோயிலும் சேர்ந்ததுதான் கம்பராமாயணம் என்ற காவியப் பூங்கோயில்.





சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

367. அச்சமும், அழகும்

கடவுள் முதலாவது மனிதனைக் களிமண்ணைக் கொண்டே வனைந்தாராம். பிறகு அந்தக் களிமண் பிரதிமையைச் செங்கல்—சூளையில் சுட்டுச் செம்மையாக்கப் பார்த்தார். 'ஐயோ பாவம்! அதிகமாய்ச் சூடு கொடுக்க வேண்டாமே' என்று இரங்கினார்.

முடிவு: சரியாகச் செம்மை பெறாத நிலைமை — வெள்ளை மனிதன் துள்ளியெழுந்தான்.

மறுபடியும் கடவுள் முயன்று பார்த்தார். இந்தத் தடவை ஊதி உஷ்ணத்தை அதிகப்படுத்தி விட்டார். முடிவு: தீந்து கருகிப்போன நிலைமை — கறுப்பு மனிதன் தோன்றினான்.

தெய்வக் குயவனார் மூன்றாம் முறையும் முயற்சி செய்தார். இப்போது ஜாக்கிரதையாக, நிதானமாக முயன்று பார்த்தார். முடிவு: சரியாகச் செம்மையாகப் பக்குவமாகி விட்ட நிலைமை — மஞ்சள் மனிதன் (சீனனும் ஜப்பானியனும் பர்மாக்காரனுமாகிய மஞ்சள் மனிதன்) தோன்றினான். இப்படி ஒரு கற்பனை, ஒரு புராண கதை, மஞ்சள் மக்களிடையே.

ஒளியும் இருளும்

இது போன்ற ஒரு கற்பனையிலே நமது பௌராணிகர்கள் தேவர்களையும் அசுரர்களையும் முனிவர்களையும் படைத்துக் காட்டுகின்றனர். பிரம்மா என்ற நான்முகக் குயவனார் மண்ணைப் பிசைந்து வனைந்த சித்திர விசித்திரங்களே தெய்வப் பிறவியும் அசுரப் பிறவியும் மானிடப் பிறவியும்!

படைப்புக் கடவுளாலும் செம்மையாகப் படைக்க முடியாத படைப்பே அசுர ராட்சஸ வர்க்கம். படைப்புக் கடவுளும் அஞ்சிக் களிமண் பிசைந்த கையைப் பிசைந்து கொண்டு பெருமூச்சுவிடும் படைப்புக் கோரம்.

பிரம்ம லோகத்துச் செங்கல்—சூளையும் சரியாகச் சுட்டுச் செம்மையாக்கித் தள்ள வில்லை ராவணாதி ராட்சஸர்களை!

இவர்கள் வெள்ளை மனிதர்களல்ல, மஞ்சள் மனிதர்களுமல்ல, கறுப்பு மனி





தர்கள்—தீவினைத் தீ சுட்டுக் கருகிப் போனவர்கள்!

கறுப்பிலே வசீகரமான கிருஷ்ண வர்ணம் ராம வர்ணங்களு முண்டு; அசுர ராட்சஸ வர்ணங்களு முண்டு.

மழைக்கால் இருட்டு மகிழ்விக்கிறது. அது கண்டு உள்ளம் குளிர்கிறது, குதூகலிக்கிறது. வாடிய பயிர் - முகத்திலே பசுமை கொஞ்சுகிறது; உயிர் ஒளிர்கிறது; அழகு பிறக்கிறது. ஆனால் புயலோடு கலந்த இருட்டு அச்சத்தையும் மரணத்தையும் விளைவிக்கிறது.

தாடகையின் கருநிறம், மரணப் புயலோடு கலந்து வரும் காரிருள் என்றும், தாடகை வதஞ் செய்த ராமபிரானின் திருநிறம் ரமணீயமான மழை வண்ணம் என்றும், மழைமேகத்திடையே தோன்றும் வான வில்லின் அதிமோகன

வண்ண மென்றும் கம்பன் குறிப்பிடு கிறான்.

தாடகை வதம் நிகழ்ந்து அகலிகை சாப விமோசனமும் முற்றுப் பெற்ற பின், ராமனை நோக்கி விசுவாமித்திர முனிவர் சொன்னதை ஞாபகப்படுத்திக் கொள்வோம்:

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்
இனி இந்த உலகுக் கெல்லாம்
உய்வண்ணம் அன்றி வேறோர்
துயர்வண்ணம் உறுவ துண்டோ'
மைவண்ணத்(து) அரக்கி போரில்
மழைவண்ணத்(து) அண்ண
லே! உன்
கைவண்ணம் அங்கு கண்டேன்,
கால்வண்ணம் இங்கு கண்டேன்.

[உய் வண்ணம்—உய்ந்து போகும் அல்லது பிழைத்துப் போகும் தன்மை. உறுவது — பொருந்துவது. மைவண்ணத்து அரக்கி—மையிருட்டுப் போன்ற நிறத்தையுடைய தாடகை.]

'மைவண்ணம்' இங்கே தீவினையின் கரு நிறம்; உலகத்தைப் பயமுறுத்துவது, ஹிம்ஸிப்பது—அழிவின் வண்ணம், ஸர்வ நாசத்தின் அறிகுறி. மழைவண்ணம் உலகை வாழ்விப்பது, தியாக வாழ்வின் சின்னம், தெய்வ வாழ்க்கையின் அறிகுறி.

தர்மாத்மாவான விபீஷணனும் கரு நிறம் தான்! துராத்மாவான ராவணனும் கரு நிறம் தான். ராவணனது கரு நிறத்தைத் தாடகையின் 'மைவண்ண' ஜாதியிலும், விபீஷணனின் கரு நிறத்தை ராமனின் 'மழைவண்ண' ஜாதியிலும் சேர்த்துப் பேசலாம்.



எனினும் பொதுவாக அதர்மத்தைக் கருமையாகவும், தர்மத்தை வெண்மையாகவும் பேசுவது மரபு. ஆகவே, விபீஷணன் அரக்கர்களிடையே வசிப்பது குறித்துப் பின் வருமாறு கம்பன் கற்பனை செய்கிறான்:

வெளித்து வைகுவ(து) அரிதெனை
அவர்உரு மேவி
ஒளிந்து வாழ்கின்ற தருமம்அன்-
னான்தனை உற்றான்.

[வெளித்து — (1) வெளிப்படையாய்; (2) தன் வெண்ணிறத்தோடு. வைகுவது அரிதெனை – தங்குவது முடியாத காரியமென்று. அவர் உரு மேவி — அந்த அரக்கர்களின் கரிய உருவத்தைப் பொருந்தி. தர்மம் அன்னான்தனை — ஸாக்ஷாத் தர்மம் இவனே என்று சொல்லும்படி விளங்கியவனை. உற்றான் — அடைந்தான்.]

சரி; செம்மையாகப் படைக்காமல் தீவினையின் கருமையுடன் அரக்கர்களைப் படைத்து விட்ட நான்முகக் குயவன், தேவர்களை ஒளி மேனியராகப் படைத்து விட்டானும். பிரம்ம லோகத்துச் செங்கல் - சூளை தக தக வென்று எரிந்து அந்தத் தகதகப்பை அப்படியே தேவர்களுக்கு அளித்து விட்டது போலத் தோன்றுகிறது!

தேவாசுரர்கள் ஒளியும் இருளும் போலே—தர்மமும் அதர்மமும் போலே. இருளின் சக்திகளான அசுரர்களுக்கும் ஒளியின் சக்திகளான தேவர்களுக்கும் எப்போதுமே போராட்டம் தான். இதுவே தர்ம அதர்மப் போராட்டம், பாவ புண்ணியப் போராட்டம். இதைத் தான் ராமராவண யுத்தம் என்கிறது ராமாயணம்.

கடவுளுக்கும் சைத்தானுக்கும் சண்டை யென்று மில்டன் பாடியிருக்கிறாரே தமது 'ஸ்வர்க்க நஷ்டம்' என்ற மகாகாவியத்திலே, அந்த விவகாரம் தான் ராமராவண விவகாரமாகிய ராமாயணத்திலும். வேறு சரித்திர

விவகாரமோ, ஆரிய திராவிடப் பூச்சாண்டியோ இல்லை. இன வெறிப் போராட்டம் இன்றைய கற்பனை, ஒரு புதுமைப் பொய்ம்மைப் புராணம்.

இது நிற்க. தேவாசுரர்களைப் படைத்து விட்டவர் மக்களாகிய நம்மையும் படைத்து விட்டிருக்கிறார். நாம் தேவர்களுடைய கட்சியிலும் சேர்ந்து கொள்ளலாம்; அசுரர் கட்சியிலும் சேர்ந்து இருள் - வாழ்வை மேற்கொள்ளலாம். தேவர் கட்சியில் சேர்ந்து ஒளி மயமான தெய்வ வாழ்க்கை வாழ முயலும் மக்களை முனிவர்கள் என்பர்.

அவதாரப் பெருநோக்கம்

தேவர்களுக்காகவும் முனிவர்களுக்காகவும் தர்மத்திற்காகவும் அவதரித்தான் ராமன் என்று கூறுகிறது ராமாயணம். இந்த அவதார தத்துவத்தைச் சுந்தர காண்டத்திலே கம்பன் அனுமன் வாயிலாக வெளியிடுகிறான்:

அறம்தலை நிறுத்தி வேதம்
 அருள்சுரந்(து) அறைந்த நீதித்
திறம்தெரிந்(து) உலகம் பூணச்
 செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோர்
 இடர்துடைத்(து) ஏக ஈண்டுப்
பிறந்தனன் தன்பொற் பாதம்
 ஏத்துவார் பிறப்ப றுப்பான்.

[தலைநிறுத்தி - நிலை நிறுத்தி. அறைந்த - முழக்கிக் கூறிய. உலகம் பூண - உலகம் பூண்டு அனுபவிக்குமாறு. செந்நெறி செலுத்தி—செம்மையாகத் தர்ம மார்க்கத்திலே செல்லுமாறு செய்து. இறந்து உக நூறி — இறந்தொழிய அழித்து. இடர் துடைத்து ஏக — துன்பம் துடைத்துச் செல்ல. ஈண்டு — இங்கே. ஏத்துவார் பிறப்பு அறுப்பான் — ஏத்துகின்றவர்களின் பிறப்பைப் போக்கும் பொருட்டு.]

'மனிதர்களுக்குள் வீரன் தனிப்பட்டு விளங்குவது போல் பேச்சுக்குள் கவிதை தனிப்பட்டு விளங்குகிறது' என்றார் பேரறிஞர் கார்லைல். கார்லைல் பேசும் வீரர்களிலும் தனிப்பட்டு விளங்கும் அதிவீரன் கம்பன் பாடும் ராமன். ஏன், இந்த அதிவீரன் தர்ம வீரனும் சத்திய வீரனும் தெய்வ வீரனுமாகிய அவதார மூர்த்தியல்லவா?

கவி அமை கீர்த்தி அக்
 காளை

[கவி அமை — கவியிலே அமையத் தக்க. அக்காளை — அந்த வீரன்.]

என்று இந்த அவதார மூர்த்தியைப் போற்றுகிறான் மகா கவியான கம்பன்.

ராட்சஸ பயத்தாலே உலகம் நடுங்கிக் கொண்டிருக்கிறது. மனிதன் தெய்வ வாழ்க்கை வாழ முடியவில்லை. இத்தகைய அதி பயங்கர நெருக்கடியில் தோன்றி ராமன் அறத்தை நிலை நிறுத்துகிறான் என்பது ராமாயணம். இது உலக சரித்திர ஸாரம், பிரபஞ்ச மகாநாடகம். சாதாரண மகா யுத்தமோ, இனவெறிப் போராட்டமோ அல்ல.

கம்பன் காவியத்தை அனுபவிக்க உண்மையான கலையுணர்ச்சி வேண்டும். தேச சரித்திரப் பூசல்களையோ, பொய்ம்மைக் கொள்கைகளையோ, பகைமையுணர்ச்சியையோ, பொறாமைக் காய்ச்சலையோ உள்ளத்தில் கொண்டவர்களுக்குக் கம்பன் கவி ருசிக்காது. சுரம் பிடித்தவனுக்குப் பால் ருசிக்குமா?

கம்பன் தன் கதாநாயகனைத் 'தென் சொல் கடந்தான், வடசொற் கலைக்கு எல்லை தேர்ந்தான்' என்று வர்ணித்திருக்கிறான். தென் சொல்லாகிய தமிழைக் கடந்து வடமொழிக் கலைகளுக்கும் எல்லை கண்டவனாகக் குறிப்பிட்டு, ராமனைத் தமிழர்களுக்கும் உரிய லட்சிய புருஷனாகவும் புருஷோத்தமனாகவும் காட்டுகிறது கம்பன் கவியுள்ளம்.

* * *

இந்த 'நாடக மகா காவிய'த்திலே இருள் மூடிய கிஷ்கிந்தா காண்டத்தைக் கடந்து நாம் சுந்தர காண்டத்தை அடையப் போகிறோம்.

தெற்குமா கடலை நோக்கி நிற்கும் அனுமனைப் போல் நாம் ஒரு சௌந்தரியப் பெருங்கடலையே எதிர் நோக்குகிறோம்.

சித்ர ராமாயணம்

பி.ஸ்ரீ

368. எல்லா வழிகளும் இலங்கைக்கே

'எல்லா வழிகளும் ரோமாபுரிக்கே செல்லுகின்றன' என்று சொல்வதுண்டு. ராமாயணத்திலும் கம்பன் போகும் வழிகளெல்லாம் இலங்கை நோக்குகின்றன; வாசகர்களை இலங்கை நோக்கிச் செலுத்துகின்றன. அரக்கர் வாழும் இலங்கையில், — ராமாயண மகாகவிகளின் மானஸ ராட்சஸ ராஜதானியை நோக்கி.

* * *

சகோதர தர்மம் ஓர் இயற்கை விதி; அதி சூட்சும்மான இயற்கை விதி. இந்தத் தர்மத்தை மீறுவதும், இதைச் சிதைக்க முயல்வதும் இரக்கமிலா அரக்கர் செயல், ராவணாதி ராட்சஸர்களின் செயல். தர்மத்தை நிலை நிறுத்த அவதரித்திருக்கும் ராமன் சகோதர தர்மத்தையும் நிலை நிறுத்துகிறான்.

வேடனாகிய குகனையும், வானரனாகிய சுக்கிரீவனையும், அரக்கனும் இராவணன் தம்பியுமாகிய விபீஷணனையும் ராமன் சகோதராக்கிக் கொள்கிறான் என்பதை விசேஷமாக வற்புறுத்துகிறது கம்ப ராமாயணம். ராமாயணம், முக்கியமாகக் கம்ப ராமாயணம், ஓர் அருமையான சகோதர தர்ம சாஸ்திரம்.

கம்ப ராமாயண முகப்பிலேயே சகோதர தர்மத்தின் அடிப்படையான ஒருயிர்–உண்மையைக் கவிஞன் நினைப்பூட்டுகிறான். அதாவது, பரம்பொருள் ஒன்றே உயிர்க்குயிராகி உயிர்களையெல்லாம் ஒன்றாக ஒரே உயிர்க்குலமாக இணைக்கிறது. இந்த ஒருயிர்–உண்மை, ஸரயு என்ற ஜீவ நதியின் ஜீவ வாக்காக வந்து பாய்கிறது நம் உள்ளத்திலே:

ஓதிய உடம்பு தோறும்
உயிரென உலாய தன்றே.

[ஓதிய உடம்பு தோறும்—சொல்லப்படுகின்ற உடம்புகளில் எல்லாம். உயிர் என—ஒரே உயிர் உலாவுவது போல. உலாயதன்றே—உலாவியது.]

சோலைகள் தோறும், காடுகள்தோறும், நீர்நிலைகள் தோறும், தோட்டங்கள் தோறும், வயல்கள் தோறும் ஸரயு நதி உலாவி உயிர் கொடுத்து வருவதுபோல், பரம்பொருள் என்ற ஒரே உயிரும் உலகம் யாவையும் உடம்பாகக் கொண்டு உலாவி உயிர்க்குலத்தை நிலை நிறுத்துகிறதாம். இந்த உண்மை-உணர்ச்சியும் இதற்கு இசைந்த ஒழுக்கமும் தான் ஆத்மநேச ஒருமைப் பாடாகிய சகோதர தர்மத்தின் உறுதியான அடிப்படையென்பது கம்பன் குறிப்பு.

இவ்வுண்மையை முற்றும் உணர்ந்து உலகத்திற்கு உத்தம வழி காட்டியாக ஒழுகும் புருஷோத்தமனே ராமன்,

கம்பன் கவிதையிலே. ராவணனே ஒருயிர் — உண்மையைச் சொல்லிலும் செயலிலும் மறப்பவன். ஏன், எண்ணம் விருப்பம் உணர்ச்சிகளிலும் மறப்பவன்.

கம்பனுடைய காவிய நாயகன், உலகத்தை ரமிக்கச் செய்யும் ராமன் — லோக ராமன். கம்பனுடைய ராவணனே லோக ராவணன் — உலகத்தை இருள்வித்துக் கதறச் செய்யும் அரக்கர்கோன். இத்தகைய கம்ப சித்திரத்திலே ஆரிய திராவிடப் பூசல்களுக்கு இடம் எங்கே? எத்தகைய சரித்திரப் பூசல்களுக்கும், இடமில்லை. சமயப் பூசல்களுக்கும் இடமில்லை. சகோதர தர்ம சாஸ்திரத்திலே சகோதர வதக் கொள்கைகளுக்கு இடம் ஏது?

சகோதர தர்மத்தின் அடிப்படையாகிய ஒருயிர் - உண்மையை ராவணனும் அறிந்திருக்கிறான்.

வையம் தந்த நான்முகன்
 மைந்தன் மகன்மைந்தன்
ஐயன் வேதம் ஆயிரம்
 வல்லோன் அறிவாளன்.

[வையம் தந்த - உலகத்தைப் படைத்த. நான்முகன் மைந்தன் மகன் மைந்தன்—பிரம்மதேவனின் கொள்ளுப்போன். வேதம் ஆயிரம் வல்லோன்—ஆயிரம் சாகைகளோடு கூடிய ஸாம வேதத்தில் வல்லவன்.]

என்று புகழ்ப்பெறும் இந்த அறிவாளன், வேதமும் உபநிஷதங்களும் குறிப்பிடும் ஒருயிர் — உண்மையை அறியாமல் இருந்திருக்க முடியுமா?

அறிவால் அறிந்துதானிருந்தான். ஆனால் இந்த உண்மை, உணர்ச்சியில் ஊன்றி ஒழுக்கமாய்த் தழைக்கவில்லை. ஏன், இந்த உண்மை உண்மையாகவே படவில்லை. உள்ளம் ஒப்புக்கொள்ளவில்லை; இதயம் விரும்பவுமில்லை. பகுத்தறிவு தூவென்று ஒதுக்கித் தள்ளிவிட்டது. கர்வம், கௌரவம் எல்லாம் வெறுத்து விலக்கிவிட்டன.

என்றாலும், ஒரு சமயம்,—ஒரே ஒரு சமயம்—இந்த ராவணேச்வரனும் நினைத்துப் பார்க்கிறான் அந்த ஒருயிர் - உண்மையை.

மயிலுடைச் சாய லாளை
 வஞ்சியா முன்னம், நீண்ட
எயிலுடை இலங்கை நாதன்
 இதயமாம் சிறையில் வைத்தான்





[மயிலுடைச் சாயலாளை—மயிலின் சாயலோடு கூடிய சீதையை. வஞ்சியா முன்னம்—வஞ்சித்துச் சிறைப்படுத்து வதற்கு முன்பே. எயிலுடை இலங்கை காதன் — கோட்டை மதில்களோடு கூடிய லங்கேச்வரனுன ராவணன்.] என்கிறபடியே, ராவணன் சீதையைக் குறித்துக் கேள்விப்பட்டதுமே தன் இதயச் சிறையில் வைத்து பிறகு வஞ் சித்து இலங்கைச் சிறையிலும் வைத்து விடுகிறுன் அல்லவா? அப்படி வஞ்சித்துப் பார்த்தும் பயன் படவில்லை யென்று கண்டதும்,

வஞ்சனேன் எனக்கு
நானே!

என்று சீதைக்கு முன்பே ஒப்புக் கொண்டு விடுகிறுன்.

சீதையை வஞ்சிக்கப் பார்த்துத் தன்னையே வஞ்சித்துக் கொண்டதாக ராவணன் ஒப்புக்கொள்கிறுன். எங்கு முள்ள பரம்பொருள் எல்லாவற்றையும் ஒன்றுகக் கோத்திருக்கின்ற சகோதர தர்ம அடிப்படையிலே, பிறரை வஞ்சிப் பவர் தமக்குத் தாமே வஞ்சகராகின்றுர். 'வஞ்சிக்கிறவன் வஞ்சிக்கப்படுவான்' என்பது தர்மச் சட்டம். இதை ராவண னும் ஒரு சமயம் நினைத்துப் பார்த்திருப் பதாகக் கம்ப ராமாயணம் தெரிவிக் கிறது.

ராவணன் மட்டுமா? — கைகேயியும் இந்த 'ஒருயிர்-உண்மை'ச் சட்டத்தை ஒரு சமயம் ஞாபகப்படுத்திக் கொண் டாள். ஓர் அரசன் மகளும் ஒரு சக்ர வர்த்தியின் தேவியு மல்லவா?

எனக்கு நல்லையும் அல்லை நீ,
என் மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை, அத்
தருமமே நோக்கின்
உனக்கு நல்லையும் அல்லை!

[நல்லேயும் அல்லே — நல்லவளும் இல்லே. அத்தருமமே நோக்கின் — பிரசித்தமாகச் சொல்லப்பெறும் (ஒருயிர்—உண்மையை அடிப்படையாகக் கொண்ட) அச் சகோதர தருமத்தை நோக்கினுல். உனக்கு நல்லேயும் அல்லே—நீ உனக்கே நல்லவளும் இல்லே; உனக்கே கேடு செய்து கொள்கிறவள் தான்.]

என்று கைகேயி கூனியை நோக்கிக் கூறுவதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

கூனி சூழ்ச்சி செய்வது அவளுக்கே கேடு சூழ்வதுதான் என்கிருள் கைகேயி. இதனுல், கோசலேயைப்போல் நல்லறிவுத்திறன் பெற்றிராத கைகேயியும் 'ஒருயிர்-உண்மை' என்ற அடிப்படையோடு கூடிய சகோதர தர்மச் சட்டத்தை அறிந்திருந்தாள் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

ஆனுல் கூனியோடு தோழமை பூண்டவளுக்கு இந்த உண்மையுணர்வு ஊன்றி நிலேபெற்று நற்பயன் விளேத்திருக்க முடியுமா? தன் சூழ்ச்சிக்குக் கைகேயி இணங்கியதும், 'என் தோழி வல்லள், என் துணே வல்லள்' என்று குதுகலப்படுகிருளல்லவா கூனி?

'உன் தோழனேக் காட்டு, நீ எப்படிப்பட்ட ஆசாமி என்பதை நான் சொல்லி விடுகிறேன்' என்று சொல்வதுண்டு. 'உள்ளமும் கோடிய கொடியாள்' — அதாவது, உடம்பைப் போல் உள்ளத்திலும் கோணலாய்க் கூனிப் போயிருந்தவள்—என்று வர்ணிக்கப்படும் கூனி – சுந்தரியுடன் நெருங்கிப் பழகி நட்புக் கொண்டிருந்த கைகேயியும் சகோதர தர்மச் சட்டத்தை ராவணனேப் போல் தெரிந்தே மீறினவள் தான்.

கூனியும் சூர்ப்பணகையும் சகோதர தர்மச் சட்டத்தையே தெரிந்து கொள்ளாதவர்கள்.

இன்னல்செய் இராவணன்
இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக்
கூனி தோன்றினுள்.

[இன்னல்செய்—உலகத்திற்குத் துன்பம் செய்கின்ற. துன்னருங் கொடு மனக்கூனி—நெருங்கி நட்புக் கொள்ள முடியாத அவ்வளவு கொடுமை நிறைந்த மனத்தையுடைய கூனி.]

இவளுக்கு எப்படித் தர்மச் சட்டம் தெரிந்திருக்க முடியும்?

சூர்ப்பணகையோ, தன்னலம் கருதிச் சகோதரனேயே நாசஞ் செய்தவள்:

நீலமா மணிநிற
நிருதர் வேந்தனே
மூலநா சம்பெற
முடிக்கும் மொய்ம்பினுள்.

[நீலமாமணிநிற நிருதர்வேந்தனே — கருநீல ரத்தினம்போல் நிறமுள்ள ராவணனே. மொய்ம்பினுள்—ஆற்றல் நிறைந்தவள்.]

* * *

இப்படியெல்லாம் சகோதர தர்மத்தையும் அதன் அடிப்படை இரகசியத்தையும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் நினேப்பூட்டிய வண்ணம், பாலகாண்டமும் அயோத்தியா காண்டமும் ஆரண்ய காண்டமும். ராவணுதி ராட்சஸர்களின் இலங்கை நோக்கி—அதாவது சுந்தர காண்டத்தை நோக்கி நம்மைச் செலுத்துகின்றன.

துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனத்திற்கான வெளிப்படைக் காரணத்தை ஆரணிய காண்டத்திலே சீதையை ராவணன் கவர்ந்து சென்ற சந்தர்ப்பத்திலே கண்டு கொண்டிருக்கிறேம். அப்படியே அயோத்தியா காண்டத்திலும் ஆரணிய காண்டத்திலும் கூனி, கைகேயி, சூர்ப்பணகை என்ற மூன்று ஸ்திரீகளின் மூலமாக எப்படித் தேவர்களின் சூழ்ச்சி வேலே செய்திருக்கிறது திரை மறைவிலே என்பதையும் அறிந்து கொண்டிருக்கிறேம்.

இந்த அறிவுடன், கிஷ்கிந்தா காண்டத்தின் வழியாக வந்து அனுமனேடு நாமும் இலங்கையை எதிர்நோக்கி நிற்கிறேம்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

369. சிறை இருந்த செளந்தரியம்

ராமாயணம் என்ருல் ‘ராமன் பெருமை, ராமன் புகழ், ராமன் வீரம், ராமன் தியாகம்’ என்றுதானே பலரும் நினைக்கிருர்கள். ராமன் பெருமையைக் காட்டிலும் புகழைக் காட்டிலும், சீதையின் பெருமையும் புகழும் ராமாயணத்தில் அதிகமாய் ஒளிர்கின்றன என்று சொல்வதில் தவறில்லை.

தியாகத்திலும் சீதைதானே ராமனையும் மிஞ்சி விடுகிருள்? சிங்காசனம் துறந்து வனவாசம் செய்த தியாகப் பெருமை ராமனைப் போல் சீதைக்கும்தான். ஆனல் முடி துறந்த பெருமையுடன் சிறை புகுந்த பெருமையும் சீதைக்குத்தானே? இதனுல்தான் சிறை இருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது ராமாயணம் என்பர் வைணவப் பெரியோர்.

ஒரு குடும்ப ரகஸ்யம்

பாற்கடலிலிருந்தோ, தமது வைகுண்ட மேல் வீட்டிலிருந்தோ பகவான் அவதாரம் செய்கிருரென்று பக்தர்கள் நம்புகிருர்களல்லவா? மீன் ஆமை பன்றி நரசிங்கம் ஆகிய அவதாரங்கள் பரிணும வணியில் படிப்படியாய் வந்த பின், வாமனுவதாரமும் வருகிறது.

அந்த அந்த அவதார காலத்திலெல்லாம் மகாவிஷ்ணு மகாலட்சுமியை நோக்கி, ‘கொஞ்சம் வெளியே அலுவலாய்ப் போய் வருகிறேன்’ என்று சொல்லிப் போவாராம், வருவாராம். கர்நாடக புருஷர் கர்நாடக வீட்டுப் பெண்களிடம் சொல்லிக்கொண்டு வெளியே போவது போல!

வாமனன் நீண்டு வளர்ந்து உலகெலாம் அளந்த திருவடிகளுடன் திரும்பி வருகிருன், தன் கடல் – வீட்டுக்கு. மகாலட்சுமி அவனுடன் வர வேற்று உலகம் அளந்த அந்தக் கதையைக் கேட்டுத் தெரிந்து கொள்கிருள். ‘ஐயோ, எவ்வளவு அலைச்சல்!’ என்று கையால் கால் பிடிக்கிருளாம், பிராட்டிக்கு உரிய அந்தப் பிரேமையுடன்:

விரிதிரைப் பாற்கடல்
  பள்ளி மேவினுன்
கரியவன், உலகெலாம்
  கடந்த தாளினை
திருமகள் கரம்தொடச்
  சிவந்து காட்டவே!

[விரிதிரைப் பாற்கடல்—விரியும் அலைகளையுடைய பாற்கடல். கரியவன்—திருமால். தாளிணை—திருவடிகள் இரண்டும். திருமகள்—மகாலட்சுமி. கரம்—கை.]



திருமகள் கை தொடச் சிவந்து காண்கின்றன திருவடிகள், எவ்வளவோ சிரமப்பட்டு உலகமெல்லாம் நடந்து சுற்றித் திரிந்து வந்த மாதிரி. இந்த நிலையில் தெய்வக் காதலர்கள் உவகையுடன் உரையாடினர் என்று கருதலாம். நம் மனோபாவத்தின் லகானைச் சற்று விட்டுத்தான் பிடிக்கலாமே.:

பிராட்டி : இனிமேலாவது தெரியுமா, நானும் கூட வந்தால் எவ்வளவு சௌகரியமாயிருக்குமென்று?

பகவான் (புன்னகையுடன்): நிறையச் சௌகரியம்தான்!

பிராட்டி : தங்களுக்குக் கவலையே வேண்டாமே—அது என்ன கதறல்?

பகவான் (சிரித்துக் கொண்டு): நிறையக் கவலையும்தான், கதறலும்தான்!



[ராவணாதி ராட்சஸர்களின் திக் விஜயத்தால் தேவர்களும் முனிவர்களும் சாதுக்களும் கதறு



கிறார்கள். அந்தக் கதறல்தான் பகவான் காதிலும் பிராட்டி காதிலும் விழுகிறது.]

கடைசியாகத் தேவர்களும் தேவரிஷிகளும் பாற்கடலின் கரையோரத்தில் வந்து முறையிடவே, பெருமாள் கருடன் மீது புறப்படுகிறார். ‘நீயும் ஏறிக்கொள் அம்மா’ என்று தேவியையும் அழைத்துக்கொண்டு போய்க் காட்சியளிக்கிறார் :

திருவொடும் பொலியஓர்,
செம்பொற் குன்றின்மேல்
வருவபோல், கலுழன்மேல்
வந்து தோன்றினான்.

[திருவொடும் – திருமாமகளான மகாலட்சுமியோடும். பொலிய – பொலிவு பெற ; அழகு பெற. கலுழன் மேல் – கருடன் மேல்.]

வாழ்க்கைத் துணைவியின் சுக துக்கங்கள்

திருமால் அயோத்தியில் ராமனாக அவதரிக்கிறார். திருமகளும் மிதிலையில் சீதையாகத் தோன்றுகிறாள். விசுவாமித்திர முனிவர் திருமணத் தூதராக வந்து சீதா கல்யாணத்தை நிறைவேற்றி வைக்கிறார் :

பிரிந்தவர் கூடினால்
பேசல் வேண்டுமோ ?

சீதாராமர்களின் திருமணம் பிரிந்தவர்—கூட்டம் தானே ? பாற்கடலில்



பிரிந்தவர்கள் மிதிலையில் சந்திக்கிறார்கள்.

அறம்தி றம்பும்என்(று)
ஐயன் அயோத்தியில்
பிறந்த பின்பும்
பிரிவிலள் ஆயினாள்.

[அறம் திறம்பும் என்று — தர்மம் தடுமாறுகிறதே என்று. ஐயன்—ராமன்.





பிரிவிலன் ஆயினள் — (திருமகள்) பிரிவில்லாதவள் ஆனாள்.]

அறத்தை நிலை நிறுத்த ஐயன் புறப்பட்டதும் அம்மையும் உடன் வருகிறாள் ஸஹதர்மிணியாக — வாழ்க்கைத் துணையாக.

இத்தகைய சீதாலட்சுமியுடன் ராமன் கம்ப ராமாயணத்திலே பேசும் முதலாவது வார்த்தையே காட்டுக்குப் போகும் செய்திதான். 'நீ இங்கே இரு, நான் போய் வருகிறேன்' என்றுதான் சொல்கிறான் ராமன். சீதைதான் பிடிவாதமாய்க் கூடவே புறப்படுகிறாள், மரவுரியைத் தானும் சுற்றிக்கொண்டு:

சீரை சுற்றித்
திருமகள் பின்செல,
மூரி விற்கை
இளையவன் முன்செலக்,
காரை ஒத்தவன்
போம்படி கண்டஅவ்
ஊரை உற்ற(து)
உணர்த்தவும் ஒண்ணுமோ?

[சீரை—மரவுரி. முன் செல—முன்னே செல்லவும். மூரி விற்கை — வலிமையமைந்த வில்லைத் தாங்கிய கை. இளையவன்—தம்பியாகிய லட்சுமணன். செல—செல்ல. காரை ஒத்தவன்—கார் மேகத்தை ஒத்த ராமன். போம்படி—போகும் விதத்தை. அவ் ஊரை உற்றது—அந்த ஊரார் அடைந்த துன்பத்தை. உணர்த்தவும் ஒண்ணுமோ—சொல்லவும் முடியுமோ.]

மிதிலைச் சுந்தரி அயோத்தி நகரச் சுந்தரியாக இருந்து சில ஆண்டுகள் இல்லறம் நடத்திவந்த பின், காடுறை சுந்தரியாகிறாள். அதாவது, வனவாசம் செய்கிறாள்.

மிதிலைச் சுந்தரியாக இருக்கும் போதே குண சௌந்தரியத்திற்கும் குறைவில்லை. குண சௌந்தரியத்தை உள்ளுறை உயிராகக் கொண்டதுதான் சீதையின் ரூப சௌந்தரியம். இரண்டும் ஒன்றைக் கொன்று ஏற்றத் தாழ்வு இல்லாதபடி விளங்குகின்றன மிதிலை நகரிலே.

அயோத்திமா நகரத்திலே இல்லறம் நடத்தும் போது குண சௌந்தரியம் ரூபசௌந்தரியத்தை வென்று விடுகிறது. வசிஷ்டர் வாக்கு இது:

மண்ணினும் நல்லள்;
மலர்மகள், கலைமகள்,
கலைஊர்
பெண்ணினும் நல்லள்
பெரும்புகழ்ச் சனகியோ
நல்லள்.

[மண்ணினும் நல்லள் - பூமிதேவியைக் காட்டிலும் பொறுமையில் சிறந்தவள். மலர் மகள் - லட்சுமி. கலைமகள் - சரஸ்வதி. கலை ஊர் பெண் - மானை வாகனமாக உடைய பார்வதி. மலர்மகள், கலைமகள், கலை ஊர் பெண்ணினும் நல்லவள் - அழகிலே லட்சுமியையும், அறிவுத்திறமையில் கலைமகளையும், பதிக்கு ஏற்ற ஸதி என்ற தன்மையில் பார்வதி தேவியையும் வென்று சிறந்து விளங்குகிறவள். சனகி — ஜானகி; சீதை.]

சீதையின் உருவ அழகைக் காட்டிலும் குண அழகு மும்மடங்கு சிறந்து பொலிகிறது என்று தெரிகிறதல்லவா? இது அயோத்தி வாழ்க்கை.

அழகு வளர்ச்சி

காடுறை வாழ்க்கையிலோ காட்டுத் தீயைப் போல் ஜொலிக்கிறது குண சௌந்தரியம்—ரூப சௌந்தரியத்தைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகமாக! இதனால் சௌந்தரியத்திற்குத் தான் என்ன வசிகரம்!

காடுகளில் அலைந்து திரிந்து உடம்பு இளைத்திருப்பதாகவே கருதலாம். மெலிந்த நிலையில் தான் சூர்ப்பணகையைச் சந்திக்கிறாள். இந்த நிலையில் தான் 'வான் சுடர்ச் சோதி வெள்ள' மாய்ப் பார்க்கிறாள் பிராட்டியை அரக்கி.

இந்த நிலையில்தான் பொன்மானையும் பார்க்கிறாள்—இரண்டுமான்கள் ஒன்றையொன்று பார்க்கின்றன என்று சொல்லும்படி. அப்போது சீதை பூக்கொய்து

கொண்டிருக்கிறாள், பர்ணசாலையின் முன்வாசற் பூஞ்சோலையில்.

இடை நோவ நடந்து நடந்து 'பூங் கொடிகளுக்கிடையே ஒரு நடையாடும் பூங்கொடி' என்று சொல்லுமாறு திரிந்து கொண்டிருக்கிறாள்:

நையா இடைநோ-
 வ நடந் தனளால்
வைதே கி, தன்வால்-
 வளைமென் கையெனும்
கொய்யா மலரால்
 மலர்கொய் துறுவாள்.

[நையா—நைந்து. வைதேகி—சீதை. வால்வளை—சுத்தமான வளைகள். கொய் துறுவாள்—கொய்து கொண்டு வருகிற வளாய்.]

காடுறை சுந்தரியின் மெலிந்த மேனி பூக்கொய்யும் இளைப்புடன் தோன்று கிறது இக் கவிதைக் கண்ணாடியிலே. இப்போதுதான் திடீரென்று 'மான் எதிர் விழித்ததன்றே' என்கிறான் கவிஞன்.

எத்தகைய பொன்மான்? 'கடக்க ஒண்ணு வினையென வந்து நின்ற மான்!' இந்தப் பொன்மான் வடிவத்திலே வந்த வினைதான் சீதையையும் ராமனையும் பிரித்து வைக்கிறது.

மானை மான் எதிர் விழித்து நோக் கிய பின், லட்சுமணனுடைய எச்சரிக் கையை மனத்திலே கொள்ளாமல் சீதையின் பிடிவாதத்தைக் கட்டளை யாகக் கொண்டு ராமன் மானைத் தொடர்ந்து போகிறான்:

சிந்துரப் பவளச் செவ்வாய்
 முறுவலன், சிகரச் செவ்விச்
சுந்தரத் தோளி னன்அம்
 மானினைத் தொடர ஏற்றான்.

[சிந்தூரப் பவளச் செவ்வாய் — சிந் தூரமும் பவளமும் போன்ற சிவந்த வாயிலே. முறுவலன் — புன்சிரிப்புடை யவனாய். சிகரச் செவ்விச் சுந்தரத் தோளினன் — அழகின் சிகரமாய்ப் பூரித்திருக்கும் அழகிய தோள்களை யுடைய ராமன்.]

இதே சிந்தூரப்பவளச் செவ்வாய் இப்படியே புன்னகை புரிய நின்றுதான், 'காட்டுக்குப் போ' என்ற கைகேயி கட்டளையையும் ஏற்றுக் கொண்டான், அன்று நாட்டிலே இந்த ராமசந்திரன்.

* * *

அந்த முறுவல்-சந்திரிகை, ராமனை விட்டு விடவில்லை சீதையின் பிரிவு ஏற் படும் வரை.

பிறகு இந்தச் சந்திரிகைக்கும் கிரக ணம் ஏற்படுகிறது. கிஷ்கிந்தா காண் டத்திலே துயரத்தில் மூழ்கியிருக்கும் ராமனைப் பார்க்கிறோம். லட்சுமணன் எவ்வளவோ ஆறுதல் சொல்லிப் பார்த் தும் ஆறுதல் கிடைக்கவில்லை. இரக்க மிலா அரக்கரிடையே சிறை யிருக்கும் சௌந்தரியத்தையே உள்ளம் நாடுகிறது, உணர்வு தேடுகிறது.

இதே சௌந்தரியச் செல்வத்தைத் தேடப் போகிறான் அனுமன் இலங்கை யிலே. நாமும் அந்தத் தெய்வத் 'திரு வால்' துணையாகப் போய்த் தேடித் தரிசிப்போம், சிறை புகுந்து தவம் கிடக் கும் சௌந்தரியத்தை.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

370. கவிக்கு நாயகன்

சுரம் பிடித்துக் கிடக்கிறான் சுக்கிரீவன். பயஜ்வரம் தான், வேறு நோய் ஒன்றும் இல்லை.

ராம லட்சுமணர் மலைமேல் விரைந்தேறி வருவது கண்டு சுக்கிரீவன் நடுங்கி ஓடித் தன் பரிவாரத்துடன் மலையின் ஒரு பக்கத்திலே குகையில் போய் ஒளித்துக் கொள்கிறான். வாலி பயம் என்ற சுர மல்லவா இந்தப் பாடு படுத்துகிறது?

பிரம்மசாரியின் பெருங் காதல்

அப்போது அஞ்சிய வானரர்களைத் தேற்றிவிட்டு ஒரு பிரம்மசாரி மறைவாயிருந்து ராம லட்சுமணரைக் கவனிக்கிறான்:

அன்பினன், உருகுகின்ற
உள்ளத்தன், ஆர்வத்தோரை,
முன்பிரிந்(து) அனையர் தம்மை
முன்னினான் என்ன, நின்றான்.

[ஆர்வத்தோரை — நிறைந்த அன்புள்ள நண்பர்களை. அனையர் தம்மை — அவர்களை. முன்னினான் என்ன — மீண்டும் எதிர்ப்பட்டுக் கண்டவன் போல.]

இத்தகைய அன்புடனும் உருக்கத்துடனும், முன்னமே கண்டு பரிச்சயம் செய்து கொண்டிருப்பவனைப் போல ராம லட்சுமணரை முதல் முதல் கண்டு நிற்கும் இந்தப் பிரம்மசாரியைத்தான் கம்பன் தன் சுந்தர காண்டக் கவிதைக்கு இசைந்த சுந்தரனாக, கதாநாயகனாகச் செய்து கொள்கிறான்.

ஆம், இந்தச் சுந்தரன் தான் அனுமன். இவனது வீர சௌந்தரியமும் விஜய சௌந்தரியமும் சுந்தரகாண்டம் எங்கும் சுடர்வீசக் காண்கிறோம்.

'கண்டதும் காதல்' என்கிறார்களே, அந்த விதமான காதல் இந்தப் பிரம்மசாரிக்கு! ஒரே பக்திக் காதல்தான் ராமனைக் கண்ணுற்றதும்.

காயெரி கனலும் கற்கள்,
கள்ளுடை மலர்க ளேபோல்
தூயசெங் கமல பாதம்
தோய்தொறும் குழைந்து
தோன்றும்!
போயின திசைகள் தோறும்
மரனொடு புல்லும் எல்லாம்
சாய்வுறும் தொழுவ போன்(று)!
இங்(கு)
இவர்களோ தருமம் ஆவார்?

[காய் எரி கனலும் கற்கள்—வெயிலில் காய்கிற நெருப்புப் போலச் சுடுகிற சரல் கற்கள். கள் — தேன். தோய் தொறும்—படும்போதெல்லாம். மரன்—மரங்கள். சாய்வுறும்—சாயத் தொடங்கு





கின்றன. தொழுவ போன்று—தொழுவனபோல.]

என்ற நினைப்பிலே, அளவில்லாத பக்திக் காதல் எல்லையில்லாது பொங்குவது நமக்கும் நன்கு புலனாகிறது.

இதிலே கவிஞனுடைய ராமபக்திக் காதலையும் காண்கிறோம். அந்தப் பிரம்மசாரியுடன் இந்தக் கவிஞனும் மறைந்து நின்று பார்த்து ஒரே பக்தி வெள்ளத்தில் முங்கி முழுகுவது போலத் தோன்றுகிறது!



சொல்லின் செல்வன்

இப்படி அருகே நின்று பார்த்தது முதல் கவிஞன் அனுமனோடு எவ்வளவு நெருங்கிப் பழகி எவ்வளவு நன்றாகத் தெரிந்து கொள்கிறான்!

> கல்லாத கலையும் வேதக்
> கடலுமே என்னும் காட்சி

[கல்லாத கலை - (இங்கே) கவிதை.] என்பதாக ராமன் தெரிந்து கொண்டது போல் கம்பனும் அனுமனைத் தெரிந்து கொள்கிறான்.

அனுமனைச் 'சொல்லின் செல்வன்' என்றும் வில்லின் செல்வனான ராமன் தெரிந்து கொள்கிறானல்லவா? அப்போதே அனுமன் ராமதூதனாகிச் சுந்தர காண்டத்தின் கதாநாயகனாகப் போகிறான் என்பதற்கு ஒரு குறிப்பு நமக்குக் கிடைத்து விடுகிறது எனலாம்.

அனுமனது சொல்லின் செல்வத்தைக் கிஷ்கிந்தா காண்டத்திலேயே ஓரளவு காண்கிறோம். இச் செல்வம் முழுதும் வெளிப்படுகிறது சுந்தர காண்டத்திலே, அனுமன் சீதையைச் சந்தித்தபோதும், ராவணனைச் சந்தித்த போதும் கூட! ராமனிடம் திரும்பி வந்து தேவியின் பெருமை பேசும் போது தான் என்ன சொல்வளம், — என்ன சொற் செல்வம்!

'வாலி காலன் வந்து விட்டான்' என்று சுக்கிரீவனிடம் ஆடிக்கொண்டே செய்தி தெரிவிக்கும்போது, அனுமனுடைய சொல்வளம், ராமபக்திக் காதலால் ஒரு புதிய ஜீவகாந்த சக்தி பெறுவது போலத் தோன்றுகிறது. ராம சுக்கிரீவரின் நட்புக்கும், வாலி மரணத்துக்கும் அனுமனே முக்கிய காரணமாகிறான்.

பேரறிவுடன் இசைந்த பேராண்மை

சுக்கிரீவனுடைய அவநம்பிக்கையை முற்றும் போக்க வேண்டுமென்று ராமன் ஏழு மாமரங்களையும் எய்து தொளைக்கும்போது மற்ற வானர வீரர்களைப் போல் அனுமனும் திடுக்கிட்டுப் போகிறான். என்றாலும் விரைவில் சமாளித்துக் கொண்டு ராமனுடைய தெய்விகப் பேராண்மையை உள்ளத்திற்குள்ளே வியந்து போற்றுகிறான் என்று கருதலாம்.



சீதையின் ஆபரணங்களைச் சுக்கிரீவன் கொண்டு வந்து காட்ட, ராமன் இரு முறை மூர்ச்சித்துப் போய் ஒருவாறு தெளிந்தும் ஆறாத் துயரத்துடன் பேசுகிறானல்லவா? அப்போது அனுமன் 'கொடுந் தொழில் வாலி'யை நினைப்பூட்டி ராமனுடைய ஆறாத மனப் புண்ணுக்கு அருமருந்து காட்டுகிறான்:

சாதுவாம் என்ற அத்
 தனுவின் செல்வனும்,
'போதும்நாம் வாலி பால்'
 என்னப், போயினர்.

[சாது—(இங்கே) சபாஷ். தனுவின் செல்வன் — வில்லின் செல்வனாகிய ராமன். போதும் — போவோம். வாலி பால் — வாலியிடம். என்ன — என்று சொல்ல. போயினர் — சுக்கிரீவன் அனுமன் முதலானவர்கள் போனார்கள்.]

வாலி அளித்த தகுதிச் சீட்டு

'வாலி காவியம்' என்று சொல்லத்தக்க வாலி வதைப் படலத்திலேதான் கவிஞன் அனுமனை மறந்து விடுகிறான். ஆம், வாலியின் வீராவேசமும் கோபாவேச



மும், இறயில் பக்தி — ஆவேசமும், கவிதா சந்நதத்தை நிறைத்து, உலகத்தையே நிறைத்து விடுவது போலக் காண்கின்றனவே!

இந்த வாலி காவியத்திலும் வாலி சுக்ரீவனை அணைத்துக் கொண்டு இதோபதேசம் செய்யும்போது அனுமனுடைய பிரஸ்தாபம் வரத்தான் செய்கிறது:

'மற்றிலென் எனினும் மாய
அரக்கனை வாலிற் பற்றிக்
கொற்றவ! நின்கண் தந்து
குரக்கியல் தொழிலும் காட்டப்
பெற்றிலென்; கடந்த சொல்லின்
பயனிலை, பிறிதொன் றேனும்
உற்றது செய்கென் றாலும்
உரியன் இவ் அனுமன்' என்றான்,

[மற்று இலென் எனினும்—உனக்கு என்னால் வேறு பிரமாதமாக ஒன்றையும் செய்ய முடியவில்லை என்றாலும். மாய அரக்கனை — வஞ்சகனான ராவணனை. வாலின் பற்றி — வாலினால் பிடித்துத் தூக்கி. நின்கண் தந்து — உன்னிடம் கொணர்ந்து ஒப்பித்து. குரக்கு இயல் தொழிலும் காட்ட — 'ஒரு குரங்காகிய என்னால் இயன்ற தொழில் இவ்வளவு தான் ஐயா!' என்று மேலே சொன்ன தொழிலைச் செய்துகாட்ட. பெற்றிலென் — பேறு பெறாதவன் ஆயினேன். கடந்த சொல்லின் — நடந்தபோன காரியங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதால். இலை — இல்லை. உற்றது செய்க என்றாலும் — ஆக வேண்டிய இந்தக் காரியத்தைச் செய்து முடிப்பாய் என்று சொன்னாலும். பிறிது ஒன்றேனும் — வேறொரு காரியத்தைச் செய்க என்றாலும். உரியன் இவ் அனுமன் — இந்த அனுமன் தகுதியானவன்.]

பிராண சத்துருவான வாலி அனுமனுக்குத் தந்த தகுதிச் சீட்டு இது. மேலும்,

அனுமன்என் பவனை ஆழி
ஐய! நின் செய்ய செங்கைத்
தனுவென நினைதி!

[ஆழி ஐய — ஆக்ஞா சக்ரத்தை யுடைய தலைவனே. செய்ய செங்கை— அழகிய சிவந்த கையிலுள்ள. தனுவென — வில்லைப் போல. நினைதி — நினைப்பாய்.]

என்கிறான் வாலி ராமனை நோக்கி.

ராமனுக்குக் கைவில்லைப் போல் அந்த விஜய கோதண்டம்போல் உதவப் போகிறான் அனுமன் என்பதை முன் கூட்டியே ஆரூடம் சொல்வது போல் சொல்லுகிறான் வாலி,

'கைவில்' என்று கூறுவதில், அனுமனுக்கு ராமனுடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் தவிர விருப்பமோ உணர்வோ வேறு இல்லை என்பதும் குறிப்பு. தூதனுக்கு இன்றியமையாத உரிமைக் குணமல்லவா இது?

ராமனுடைய கோதண்டம் உயிர் பெற்றுத் தானே கடல் தாவி இலங்கை புகுந்து அரக்கர்களைப் பயமுறுத்தி எச்சரிக்கை செய்துவருவது போல் அல்லவா இருக்கிறது அனுமனது இலங்கை விஜயம்?

பரஸ்பர மகா விசுவாசம்

இத்தகைய குணம்தான், சுக்கிரீவ பட்டாபிஷேகம் நடை பெற்றபின் அனுமன் ராமனைப் பிரிந்து செல்ல முடியாமல், 'உன்னுடன் இங்கிருந்து பணி செய்வேன்' என்று சொல்வதற்கும் காரணம். ராமன் அதை மறுத்துக் கூறிய பின்பு தானே சுக்கிரீவனுடன் கிஷ்கிந்தைக்குப் போகிறான்.

அனுமனுக்குத் தலைவனாகிய சுக்கிரீவனிடத்திலுள்ள அன்பைக் காட்டிலும், நம்பிக்கையைக் காட்டிலும், ராமனிடமுள்ள பக்தி விசுவாசம் விரைவில் எவ்வளவோ மடங்கு அதிகரிப்பதுடன், ராம பக்தியே அனுமனுக்குத் தெய்வ பக்தியுமாகி விடுகிறது.

சுக்கிரீவனுக்கு அனுமன் மீதுள்ள விசேஷ நம்பிக்கையால் தான் அனுமன் முதலியோரைத் தென் திசையில் போய்ச் சீதையைத் தேடச் சொல்லுகிறான். இத்தகைய நம்பிக்கைக்கும் எவ்வளவு மேலே மேலே போய் விடுகி

றது ராமனுக்கு அனுமன் மீதுள்ள நம்பிக்கை !

அங்கதன் தலைமையில் அனுமன் முதலானோர் தென் திசை நோக்கிப் புறப்படும்போது ராமன் அனுமனை மாத்திரம் தனியே அழைத்துப் போய்ச் சீதைக்குச் சொல்ல வேண்டிய அடையாள வார்த்தைகளைச் சொல்லி அனுப்புகிறானல்லவா ?

பரிபூர்ண கடாட்சம்

கடைசியாகக் கணையாழியைக் கொடுத்தனுப்புகிறான். கணையாழி கொடுத்து 'அறிஞனே !' என்று வாய் குளிர நெஞ்சு குளிர அழைக்கிறான். அழைத்து, 'நீ போகும் காரியம் முழுவதும் இடையூறில்லாமல் இனிது நிறைவேறுவதாக' என்று பரிபூர்ண கடாட்சம் செய்து விடை கொடுக்கிறான்.

இப்படி ராமனுடைய அருளே துணையாக—முழு அருளையும் முன்னிட்டுக் கொண்டு—அனுமன் இலங்கை போய்ச் செய்யும் தைரிய சாகஸச் செயல்களைத் தான் சுந்தர காண்டத்திலே பார்க்கப் போகிறோம்.

இதுவரை ராமன் புகழாகிய ராமாயண வளர்ச்சி எந்த நிலையில் இருக்கிறது? சுந்தர காண்டத்தினால் எத்தகைய புதிய சௌந்தரியத்தை அடையப் போகிறது? சற்றுப் பார்க்கலாம்.

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்தை முன்னிட்டு ராமாவதாரம் ஏற்படுகிறது. இப்பெரு நோக்கத்திற்காகவே சீதா கல்யாணமும் நடைபெறுகிறது. இவ் விரண்டு பிரதான நிகழ்ச்சிகளுக்குமிடையே தாடகை வதம், வேள்வி காத்தல், அகலிகைக்கு அருள் செய்தல், வில்லிறுத்தல் ஆகிய நிகழ்ச்சிகள். சீதா கல்யாணத்திற்குப் பின், அயோத்திக்குப் புறப்பட்ட பின், பரசுராம கர்வபங்கம் நிகழ்கின்றது. இது பாலகாண்டம்.

வில்லிறுத்தல் முதலான பெரு நிகழ்ச்சிகளெல்லாம் சீதை – காதலின் வெற்றியாகவே ராமனுக்குப் புகழ் விளக்கின்றன எனலாம். சீதை ராமனுடன் வனம் புகுவதே காதல்—வெற்றி தான். அயோத்தியா காண்டத்திலே 'குகனுடைய நட்பு' முதலான நிகழ்ச்சிகளுக்கும் சோபை தருகிறது சீதை – காதல். 'தையல் தன் கற்பு' முதலாவது துணையாகச் செல்லுகிறதாம், நட்ட நடு நிசியிலே மூங்கிற் காட்டில் ராமன் முதலானோர் அடி வைத்துச் செல்லும்போது.

ஆரணியத்திலும், வாழ்க்கைத் துணைவியின் காதலும் கற்பும் ராமன் திருப்புகழுக்கு ஓர் அற்புத வளர்ப்புப் பண்ணையாக அமைகின்றன. சீதையை ராவணன் அபகரித்துச் சென்றது தான் ராமன் புகழுக்கு ஒரு கிரகணம் போலத் தோன்றுகிறது.

தாரத்தை இழந்த ராமன் சிறிய தந்தையின் ஸ்தானத்திலிருந்த ஜடாயுவையும் இழந்து தவிக்கிறான். இந்த நிலையில் கிஷ்கிந்தா காண்டத்திலே பிரவேசிக்கிறோம். இங்கே தருமமும் மறைந்து நின்றுதான் தன்னைக் காத்துக் கொள்ள நேர்கின்றது !

சுக்கிரீவனுடைய நட்பு இக் காண்டத்தின் பெரு நிகழ்ச்சி யென்பது வெளிப்படை. ஆனால் அனுமனைப் பக்தனாகப் பெறுவதே இக் காண்டத்தின் தனிப் பெரு நிகழ்ச்சியாகும்.

அனுமன் சிறையிருந்தவளைக் கண்டு கணையாழி கொடுத்துச் சூடாமணி பெற்று, அரக்கருக்குப் பாடம் கற்பித்து ஊர் தீயிட்டு மீண்டு வந்து 'கற்பினுக்கு அணி'யின் தியாக சௌந்தரியத்தை வெளியிடும்போது, கிரகணம் நீங்கி ராமன் திருப்புகழ் எப்படிப் பிரகாசிக்கப் போகிறது ! இதனால்தான் அனுமனைக் கம்பன்,

> செவிக்குத் தேனென இராகவன்
> புகழினைத் திருத்தும்
> கவிக்கு நாயகன்

[கவிக்கு நாயகன் — வானரர் தலைவன்.]

என்று புகழ்ந்து பேசுகிறான்.

